# செம்பியன் செல்வன்



# தமிழுக்காய் வாழ்ந்து
# தமிழோடு கலந்தவரே.....!

கறுத்த முடியுடனும் கம்பீரத் தோற்றத்துடனும் காட்சியளித்தீர்களே கண்பட்டு விட்டதோ தெரியவில்லை. காணமுடியவில்லை உம்மை. விடியலைத் தேடும் வெண்புறாக் கூட்டத்தோடு விடியலைக்கான சென்றுவிட்டீரோ உமது பெயர் கூறியதால் எமது பெயர் தெரிந்தது பலருக்கு. எம்மை வழி நடத்தும் மாலுமியாய் இருந்தீரே. மாலுமியற்ற கப்பலாய் நிற்கும் அக்காவை மறந்தீரோ. எப்படி மனம் வந்ததையா எமைவிட்டு நீர் செல்ல எள்ளளவும் தன்னலம் கருதாது வாழ்ந்தீரே. தமிழைத் தவிர வேறு எதையும் பெரிதாக நீர் மதிக்கவில்லை. மதித்திருந்தால் பெரும் பதவிகள் உமைத்தேடி வந்திருக்கும். பிழையைப் பிழை என்று கூறுவதில் நீர் அடுத்த நக்கீரரையா. குடும்பத்திற்காய் நீர் நினைத்ததை கொஞ்சம் தமிழிற்காய் நீர் வாழ்ந்தவை ஊரறியம். பெரியப்பா பெரியப்பா என்று பெறாமகள் காயா கதறி அழுவது கேட்கவில்லையா உமக்கு. உங்களைக் காண அவள் வந்த போது யாழ் நகரை சுற்றிக் காட்டி விளக்கமளித்தீரே. உன்னைப் பார்த்துவிட்டேன் சண்னையும் ஒரு தடவை பார்க்க வேண்டும் என்று கூறினீர்களாம். எமைவிட்டு பிரியப் போகிறீர்கள் என்று முதலே உங்களுக்கு தெரிந்துவிட்டதோ பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் நாம் வாழ்ந்தாலும் பாசத்தோடு எமை நேசித்தவரே பறந்தோடி நாம் வந்தபோது எத்தனை அறிவுரை எமக்கு கூறினீர்கள். என்மகனின் தமிழ்கண்டு மறக்காதே தமிழை என்ற தட்டிக் கொடுத்தீரே. என் துணைவியிடம் இவனைக் கவனமாகப் பார் என்று சிரிப்புடன் கூறினீரே. அந்தச் சிரிப்பை இனி என்று காண்பேன். உங்கள் அழகுத் தமிழ்ச்சிறப்புப் பேட்டியை விக்டோன் T.V யில் பார்த்தோம் என்றார்கள் பலர். எனக்கு அந்த சந்தர்ப்பம் கிடைக்கவில்லையே இறுதியாய் உங்கள் முக தரிசனத்தை கண்டிருப்பேனே. உமது முகத்தை கான முடியாத பாவியானேன். உங்களை கான வர பயண ஒழுங்குகள் செய்திருந்தேன். அதற்குள் பறித்துவிட்டான் பாவி காலனவன் உங்களை. ஆலம் விழுதுகள் போல உறவு ஆயிரம் இநந்தென்ன வேர்போல இருந்தெம்மை வீழ்ந்துவிடாமல் காத்தீரே. அப்பாவின் மறைவிற்குப் பின் அப்பாவைப் போல் எம்மைப் பார்த்தீரே. தானைத் தலைவனை இழந்து விட்டோம் தவிக்கின்றோம் புழுப்போல. உம்மால் நாட்டுப் பற்றாளன் பட்டம் உயர்வு பெற்றது. தமிழ் உள்ளவரை உங்கள் பெயர் நிலைக்குமையா தமிழிற்காய் வாழ்ந்து தமிழோடு கலந்துவிட்டீர் எம்மைத் தவிக்க விட்டு. உங்கள் செயலில் எதை மறக்க எதை நினைக்க உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்.

மைத்துனர்
சண்முகம் குடும்பம்.

# கண்ணீர் மலர்களைக்
# காணிக்கை ஆக்குகிறோம்

என்ன தவம் செய்தாள் ஐயா
என் தங்கை உமைக் கணவராய்ப் பெற
நண்பனாய், மச்சானாய் எம் குடும்பத்தைப்
பெருமைப்படுத்தினாய்.
பொன்வேண்டாம் பொருள் வேண்டாம்
புவனம் மட்டும் போதும் என்றாய்
எழுச்சி உன் சிறுவயதிலேயே இரத்தத்துடன் கலந்ததையா.
காலமெல்லாம் என் தங்கையைக் காப்பாய் என
எண்ணி மகிழ்ந்தேன்.

நடுவழியில் தவிக்கவிட்டுச் சென்றது ஏனய்யா
கொடியிடையாள் துவண்டு வதங்கி
நிலத்தில் கிடக்கிறாள்
மனந்தாங்குதில்லை எமக்கு
மண் விடுதலைக்கு உன்சேவை அளப்பரியதையா.
மீளாத் துயில் கொள்ளும் உமக்கு எமது கண்ணீர்
மலர்களைக் காணிக்கையாக்கும்....

**மைத்துனர்**
**கீதபொன்கலம், செல்லத்துரை**
**மருமக்கள்.**



# உதிர்ந்த பூக்களிடையே ஒரு உயிர்ப்பூ

1943 ஆம் ஆண்டு ஜனவரி 01 இல் திருநெல்வேலியில் ஆறுமுகம் தமர்தாம்பிகை தம்பதியினருக்கு இரண்டாவது மகனாகப் பிறந்தவர் தான் ஆறுமுகம் இராஜகோபால் (செம்பியன் செல்வன்). இவர் மிகச் சிறிய வயதிலேயே பெற்றோரை இழந்து ஆச்சியினாலே (அம்மாவின் தாய்) வளர்க்கப்பட்டவர். பெற்றோர் இல்லாத அண்ணன் கணேச பிள்ளையையும் இவரையும் ஆச்சி நாகமுத்து எவ்விதக் குறைவுமின்றி அறிவிலும்- உயர் ஒழுக்கப் பண்பிலும் வளர்க்கத் தவறவில்லை. நாகமுத்து ஆச்சி தமிழறிவு நிறையப் பெற்றவர். அவர் தனது பேரப்பிள்ளைகளைக் கண்டிக்கும் போது பழந்தமிழ் அறநெறி நூல்களின் மேற்கோள்களைக் காட்டியே கண்டிப்பார். இதனால் 'தமிழ்ப் பேராசிரியருக்கு அவர் எந்தளவும் குறைவில்லாதவர்' என்று செம்பியன் செல்வன் அடிக்கடி கூறுவார். செம்பியன் செல்வன் தனது சிறுவயது மற்றும் இளமைக்கால அனுபவங்களை மற்றவர்களுக்கு பகிரும் போது ஆச்சியைப் பற்றி கருத்துப்பரிமா றாது அவரது உரையாடல் ஒரு போதும் அமையாது. 'அமைதியின் இறகுகள்' என்னும் சிறுகதைத் தொகுப்பினை செம்பியன் செல்வன் தனது ஆச்சிக்கு அர்ப்பணம் செய்யும்போது 'நான் இறந்தும் இடம் புல்முளைத்து மேடாய்ப் போகாவண்ணம், உயிரளித்து, எனைக்காத்து, உண்மையறிவூட்டி, ஆளாக்கி உலகத்தில் உன்பங்கு இதுவென்று ரைத்து, உலகவிட்டு காரியமே வாழ்வாக வாழ்ந்து காட்டும் நாகமுத்தெனும் நான் காணும் தெய்வமான என் ஆச்சியின் காலடிக்கு' என்கிறார். இதில் இருந்து செம்பியனின் உயர் ஆளுமை விருத்திக்கு ஆச்சியின் பங்களிப்பு அதிகமாக இருந்திருக்கின்றது என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது.

செம்பியன் செல்வன்சிறுவனாக இருந்த போது, அவரது அண்ணன் கணேச பிள்ளை எழுத்தாற்றலை வளர்க்கக் கூடிய சூழலை ஏற்படுத்திக் கொடுத்தார். இதனால் அவர் யாழ். இந்துவில் ஐந்தாம் வகுப்பு படிக்கும் போதே எழுதத் தொடங்கி விட்டார். இந்தச் சூழல் எப்படித் தோன்றியது என்றால், அண்ணன் கணேசபிள்ளை 1952 ஆம் ஆண்டுகளில் தன் நெருங்கிய நண்பருடன் கையெழுத்துச் சஞ்சிகை, மாற்று சஞ்சிகையாக நடாத்தி வந்தார். அந்த நண்பர் பத்மநாதன் அமெரிக்க நாட்டில் உயர் அறிவியியல் அதிகாரியாக உள்ளார். பத்மநாதன் 'தாரா' என்ற மாதக் கையெழுத்து ஏட்டை மாதமொன்றுக்கு தயாரித்து அனுப்ப; செம்பியன் செல்வனின் அண்ணன் 'செங்கதிர்' என்ற ஏட்டை அனுப்புவார். இதில் சிறுவர் பகுதியை செம்பியனின் ஆக்கங்கள் அலங்கரித்து நிற்கும். இதில் 'சி.ஐ.டி சிங்காரம்' என்று அப்போது அதில் எழுதிய சின்னஞ் சிறு நாவலும் உள்ளடங்குவதாக, அவர் சிறு வயது அனுபவத்தை மீட்டுப் பார்க்கும் போது கூறுவார். (புலரி-ஐப்பசி.மார்கழி - 2004)

இந்தப் பின்னணிகளினால் செம்பியன்; அண்ணன் கணேசபிள்ளை மீது கொண்டுள்ள அன்பும் , பாசமும் , மரியாதையும் அதிகமாகும். இதற்குக் காரணம் செம்பியன் சுயமாக வளர்வதற்கு உந்து சக்தியாக அண்ணன் இருந்திருக்கிறார். 'நான் நானாகவே வளர என்னுள் ஒருபோதும்தன்னை புகுத்தாது என்னைச் சுயம்புவாக எண்ணத்தாலும் செயலாலும் வளர்த்து, எனக்கு எல்லாமாக நின்ற அண்ணன்...' என்று 'நெருப்பு மல்லிகை' நாவலிலும், 'அன்றெனக்கு அண்ணைகுள் அன்னையாய் நீ புரிந்த தவம் ஊரறியும்; உறவறியும் மொழி யறியா - நிலை மாற விழியொழுகு நீருடனே தாழ்பணிந்து...' என்று 'சர்ப்பவியூகம்', சிறுகதைத் தொகுதியிலும் அர்ப்பணம் செய்கின்றார்.

அன்னைக்கு அன்னையாக இருந்த அண்ணன்; செம்பியனின் வளர்ச்சிப் பாதைக்கு தடம் பதித்துக் கொடுத்தார். இதனால் அவர் பக்தியுணர்வுடன் இரு நூல்களையும் அர்ப்பணித்தது நன்றியுடன் கூடிய பாசமே ஆகும்.

யாழ்ப்பாணம் இந்து தமிழ் ஆரம்பப் பாடசாலையிலும், உயர் கல்வியை யாழ். இந்துக் கல்லூரியிலும் செம்பியன் செல்வன் கல்வியினைக் கற்றார். இங்கு கம்யூனிஸ்டாக வாழ்ந்து மறைந்த கார்த்திகேசன், அற்புதரத்தினம், இலக்கியவாதிக ளான வை.ஏரம்பமூர்த்தி,க.சிவராமலிங்கம் முதலிய திறமைமிக்க ஆசிரியர்கள் இவருக்கு கிடைத்தது. மற்றும் இலக்கிய ஆர்வமும் உத்வேகமும் கொண்ட மூத்த வர்கள் கவிஞர் சோ.பத்மநாதன், கவிஞர் பஞ்சாட்சரம் (ச.வே அல்ல இவர் இன் னொருவர்) முதலியோரும், சகதோழர்களாக விளங்கிய செங்கை ஆழியான், முனியப்பதாசன், து.வைத்திலிங்கம், வை.அ.கைலாசநாதன் என்னும் 'அங்கை யன்' முதலியோரும் இலகக்கியத் துறையில் செம்பியன் செல்வனை வளர்த்தெடுப் பதிலும், படைப்புலகில் நாட்டம் கொள்ளவும் வைத்துள்ளன. இளம் வயதிலேயே அவர் சிறந்த வாசிப்பாளனாக இருந்தார். குடும்ப வறுமை அவருக்கு புத்தகங்களை- சஞ்சிகைகளை சொந்தமாக வாங்கத் தடை விதித்தது. எனினும் தனது ஆருயிர் நண்பன் செங்கை ஆழியானிடம் இருந்தும்; நூலகங்களில் இருந்தும் நூல்கள் - சஞ்சிகைகள் பெற்று நிறைந்த வாசிப்பாளனானார்.

செம்பியன் செல்வன் 1960 ஆம் ஆண்டுகளில் பேராதனை பல்கலைக் கழகத் துக்கு அனுமதி பெற்று புவியியல் சிறப்புக்கலைப் பட்டதாரியானார்.

இவர் 17 ஆவது வயதிலே பல்கலைக்கழகம் சென்றார் என்பது இங்கு குறிப்பிடத் தக்கது. அப்போதே அவர் எழுதவும் ஆரம்பித்துவிட்டார். பல்கலைக்கழகத்தில் ஏற்பட்ட இலக்கிய மறுமலர்ச்சியால் உருவாக்கப்பட்டவர்களில் செம்பியன் முக்கிய மானவர். இந்தப் பல்கலைக்கழகச் சூழலில் ஆற்றல்மிக்க எழுத்தாளர் கூட்டம் செம்பியன் செல்வனின் நண்பர்களாகவும் இருந்துள்ளனர். செங்கை ஆழியான், செ.யோகநாதன், குந்தவை, துருவன், அங்கையன், கைலாசநாதன், நவசோதி, கலா பரமேஸ்வரன் என அந்தப் பட்டியல் நீளும்.

இவர்கள் பல்கலைக்கழகத்தில் படித்த காலத்தில் ஒன்பது சிறுகதைகளைத் தாங்கிய 'காலத்தின் குரல்கள்' எனும் தொகுப்பு மார்ச் 1961 ஆம் ஆண்டில் வெளி வந்தது. இதில் 'புதிய பரம்பரையின் துருவ நட்சத்திரம்' என்னும் அவரது சிறுகதை பிரசுரமாகியது. 1962 ஜனவரியில் பன்னிரண்டு சிறுகதைகள் தாங்கிய 'கதைப்பூங்கா' என்னும் தொகுப்பு வெளிவந்தது. இதில் 'பாதிமலர்' எனும் அவ ரது சிறுகதை பிரசுரமாகியது. மேலும் 1963ஆம் ஆண்டு ஜனவரியில் பத்து சிறு கதைகளைத் தாங்கி வெளிவந்த 'விண்ணும் மண்ணும்' என்ற தொகுப்புக்கு; செம்பி

யன் செல்வனே தொகுப்பாசிரியராக இருந்துள்ளார். இதில் 'வர்க்கங்கள்' என்னும் அவரது சிறுகதையும் இடம் பெற்றுள்ளது. 1964 ஆம் ஆண்டில் 'யுகம்' எனும் சிறு கதைத் தொகுப்பும் வெளிவந்தது. இந்த நான்கு சிறுகதைத் தொகுப்புக்களிலும் செம்பி யன் செல்வனின் பங்களிப்பு அதிகமாகவே இருந்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

செம்பியன் செல்வன் பல்கலைக்கழக சஞ்சிகைகளுக்கு எழுதியதோடு மட்டும் நின்று விடாது, ஈழத்தின் பிரபல தினசரி பத்திரிகைகளிலும் தனது எழுத்துத் திறமையை வெளிப்படுத்தினார். பெரிய அறிஞர்களின் படைப்பையே தாங்கி வரும் 'சாஹித்திய' மண்டல வெளியீடாகிய 'கலைப்பூங்கா' இவர் பல்கலைக்கழக மாணவ நிலையிலேயே எழுதிய கட்டுரை ஒன்றை விரும்பிப் பிரசுரித்தது. இது செம்பியன் செல்வனின் உயர் ஆற்றலைப் படம் பிடித்துக்காட்டுகிறது. இவர் இளமையிலேயே உன்னத படைப்புக்களை பல்துறையிலும் மேற்கொண்டார். பல்துறையிலும் பரிணமித்தார்.

செம்பியன் செல்வன் நாடகத்துறைக்கு ஆற்றிய பங்களிப்பு காத்திரமானது. இதற்கு இவரின் நாடக பிரதியாக்கங்களுக்குக் கிடைத்த பரிசில்கள் கட்டியம் கூறும். 1966,1967 ஆம் ஆண்டுகளில் இலங்கை கலைக்கழக நாடக எழுத்துப் பிரதிப் போட்டிகளில் 'இந்திரஜித்', 'இருளில் எழும் பெருமூச்சுக்கள்' இரண்டாம், முதலாம் பரிசுகளைப் பெற்றன. 1975, 1976 ஆம் ஆண்டுகளில் இலங்கைக் கலாசாரப் பேரவையின் நாடக எழுத்துப் பிரதிப் போட்டிகளில் 'சின்ன மீன்கள்', 'எரியும் பிரச்சினைகள்' முதற்பரிசுகளைப் பெற்றன.

அன்னாரின் 'மூன்று முழு நிலவுகள்' என்னும் நாடக நூல் ஆசீர் வெளியீடாக 1967 ஆம் ஆண்டுகளில் வெளிவந்தது. இந்த நாடகம் பற்றி பேராசிரியர் சு.வித்தியானந்தன் 'அரு.இராமநாதனின் அசோகனின் காதலி, எஸ்.பொன்னுத் துரையின் சதுரங்கம், நாடக வரிசையில் செம்பியனின் மூன்று முழு நிலவுகள் நாடகம் மகத்தான வெற்றி பெற்றுள்ளது. மேடைக்கும், வாசினைக்கும் ஒப்பவே உயிரூட்டும் உரைநடையும், நாடக மறை கவர்ச்சியும் கொண்ட நல்ல நாடகம்' என்று கருத்துக் கூறியுள்ளார்.

ஈழநாடு தனது 10 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடத்திய இலக்கியப் போட்டியில் செம்பியன் செல்வனின் 'விடிய இன்னும் நேரமிருக்கு' என்னும் ஓரங்க நாடகம் முதல் இடம்பெற்றது. இந்த நாடகத்தில் யாழ்ப்பாணத்துச் சமூகம் ஒன்றினை நன்கு படம் பித்துக்காட்டுகிறார். ஏழைக் குடும்பமொன்றின் ஆசா பாசங்களையும், அவலங்களையும் இந்த நாடகம் சித்தரிக்கிறது. ஈழநாடு பரிசு பெற்ற நான்கு நாடக பிரதிகளும் 'விடிய இன்னும் நேரமிருக்கு ...' எனும் புத்தகமாக ஜனவரி 1971 ஆம் ஆண்டில் ஈழநாடு வெளியீடாக வந்தது.

செம்பியன் செல்வன் நாடகத்தின் மீது கொண்ட ஈடுபாடு காரணமாக 1977 - 1983 ஆம் ஆண்டுவரை இலங்கைக் கலாசாரப் பேரவையின் தமிழ் நாடக ஆலோசனைக் குழுவின் உறுப்பினராகவும், 1981 ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கைப் பிரதேச அபிவிருத்தி அமைச்சின் தமிழ் நாடக மதியுரைக் குழுவின் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார். மேலும் பேராசிரியர் சு.வித்தியானந்தனு டன் இணைந்து வெளித்தெரியா நாட்டுக் கூத்துக் கலைஞர்கள் பலரைக் கௌரவித்தமையில் செம்பியனுக்கும் பங்குண்டு என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

சிறுகதைத் துறையில் முக்கியமானவராக செம்பியன் செல்வனை உள்ளடக்கிக் கொண்டாலும், அவர் சிறந்ததொரு நாவல் ஆசிரியராக ஈழத்தில் பேசப்படுமளவுக்கு

பங்களிப்புச் செய்துள்ளார். அந்த வகையில் 'கானகத்தின் கானம்' என்ற நாவல் 'மீரா' வெளியீடாக 1989.08.26 ஆம் ஆண்டில் வெளிவந்தது. இந்த நாவல் அச்சாகிய கால அநர்த்தப் பயங்கரச் சூழலில் வெளியீட்டாளர், எழுத்தாளர் பாதுகாப்புக் கருதி 64 பக்கங்களை தியாகம் செய்த நாவல் ஆகும். இந்த நாவல் பற்றி பதிப்பாசிரியர் டி.லிகோரி 'தெளிந்த நீரோடையாக ஆரம்பிக்கும் இந்த நாவலைத் தென்றலாகக் கொண்டு சென்று புயலாகவே முடித்திருக்கிறார் செம்பியன் செல்வன்' என்றார்.

செம்பியன் செல்வனின் 'நெருப்பு மல்லிகை' என்ற நாவலும் மிக உன்னத படைப்பாகும். இந்த நாவல் அதிசிறந்த பிரதேசப் பரிசு நாவல் ஆகும். வீரகேசரியின் 73 ஆவது பிரசுரமாக நவம்பர் 1981 ஆம் ஆண்டில் வெளிவந்தது. இந்த நாவலின் கருவூலத்தைப் பற்றி அவர் குறிப்புரை தருகையில் 'பிரதேச நாவல்களில் கிராமியம் சார்ந்தவை ஒரு குறிப்பிட்ட வாழ்க்கை நெறியில் இயங்கும் தன்மைய தனித்துவ மானவை.' ஆனால்; நகர் பிரதேசங்களில் பல திசைகளிலிருந்தும் பல்வேறு தேவைக் காக மக்கள் நகர்ந்து வந்து குடியேறியதால் (அதனாற்றான் நகரம் என்றாயிற்றோ?) ஒரு கலப்பின வாழ்க்கை நெறிப் பண்புகள் காணப்படுகின்ற சடங்கு, சம்பிரதாயங்கள், மொழிவழக்கு, இனங்கள், மதங்கள், நடைமுறைப் பழக்கங்கள் போன்றவற்றில் ஏற்பட்ட தொடர்புக்கப்பால், ஒன்றிற்கு ஒன்று சம்பந்தப்படாத சம்பவங்கள் கூட நகர் முழுவதையும் பாதித்துவிடும் ஆபத்து தோன்றுகிறது. எதிலும் ஒரு தெளிவான வரையறையைக் காணமுடியவில்லை என்ற உண்மையை இந்த நாவல் புலப்படுத்துகிறது' என்கிறார். 'நெருப்பு மல்லிகை' நாவல் வீரகேசரி பிரதேச நாவல் போட்டியில், 81 நாவல்களிடையே கலாநிதி பொன். பூலோகசிங்கம், திரு. இ. இரத்தி னம், திரு. மு. பொன்னம்பலம் ஆகியோரால் ஏகமனதாக முதலாவதாகத் தெரியப் பட்டு, அதிசிறந்த பிரதேசப் பரிசு நாவல் என இரட்டை முதல் பரிசு பெற்றது இந்த நாவல்.

'விடியலைத் தேடும் வெண்புறாக்கள்' எனும் நாவலை செம்பியன் செல்வன் ஈழமுரசில் தொடராக எழுதிவந்தார். இது 300 பக்கங்கள் கொண்ட நூலாக அச்சாகியிருந்தது. 1995 ஆம் ஆண்டில் இடப்பெயர்வுக் காரணமாக 'விடியலைத் தேடும் வெண்புறாக்கள்' நாவலின் அச்சான பிரதிகள் அடங்கி அழிந்து போயின. இது தாயக விடுதலைக்கு வலுச்சேர்ப்பதாக அமைந்திருந்தது. 'நிழல்கள்' 1963 ஆம் ஆண்டுகளில் சுதந்திரனில், செங்கை ஆழியானும், செம்பியன் செல்வனும் ஒருவர் மாறி ஒருவராக எழுதிய தொடர்தான் 'நிழல்கள்'. இந்த இருவரும் இணைந்து எழுதிய 'நிழல்கள்' யாழ்ப்பாண சமூகத்தின் முதிரா இளைஞர்களின் மனப் போராட்டங்களைச் சுவையாகச் சித்தரிக்கும் நாவல், செங்கை ஆழியான் எழுதிய அத்தியாயங்கள் சுவைப்படக் கதையைச் சொல்லி நகர்த்துவனவாக அமைய, செம்பியன் செல்வனின் அத்தியாயங்கள் கருத்துக்களைச் சொரிந்து நாவலின் இறுக்கத்தினைப் பேணியுள்ளன. மேலும் செம்பியன் செல்வன் 'நேரங்கள்', 'கர்ப்பக்கிரகம்' ஆகிய நாவல்களையும் படைத்துள்ளார்.

குறுங்கதையும், உருவகக்கதையும் செம்பியன் செல்வனினால் சிறப்பு பெறு மளவுக்கு அதிக பங்களப்பினைச் செய்திருக்கிறார். இவர் ஈழத்தில் தரமான குறுங்கதைகளைப் படைத்துள்ளார். அதற்கு இவரது 'குறுங்கதை நூறு' சிறந்த எடுத்துக்காட்டு. இந்த நூல் 'நான்' வெளியீடாக 27 டிசம்பர் 1986 ஆம் ஆண்டில் வெளிவந்தது. இந்த நூலின் வெளியீட்டாளர் வின்சன் பற்றிக் 'இறுக்கமாகவும், சுருக்கமாகவும் கருத்துக்களைத் தீர்க்கமாகச் சிந்திக்கச் செய்வதில் வல்லவர்' என செம்பியன் செல்வனின் திறமையைப் பாராட்டுகின்றார். இவ்வாறு நூலுருப்பெற்ற

குறுங்கதைகளைவிட ஏராளமான குறுங்கதைகள் பல்வேறு சஞ்சிகைகள் - பத்திரிகைகளில் எழுதியுள்ளார் என்பது இங்கு குறிப்பிட்டே ஆகவேண்டும்.

உருவகக் கதைத்துறையில் 'சு.வே, எஸ்.பொன்னுத்துரை (எஸ்.போ), எம்.ஏ.ரஹ்மான் ஆகியோரின் வரிசையில் செம்பியன் செல்வனும் காத்திரமான உருவகக் கதைகளைப் படைத்துள்ளார். கவித்துவமான சொற்களும், புதிய உரை நடைகளும் இவரது உருவகக் கதையை அலங்கரிக்கும், ஐம்பதுக்கு மேற்பட்ட உருவ கக் கதைகளை இவர் படைத்துள்ளார்.' இவ்வாறு செங்கை ஆழியான் குறிப்பிடுகின்றார்.

உருவகக் கதைகள் தொகுக்கப்பட்டு, அச்சிடப்பட்ட நிலையில் இடப்பெயர்வின் இழப்புக்கு இரையாகிப் போன நூலாகும். இந்த இலக்கிய வடிவத்துக்கு புதியதோர் பரிணாமம் கொடுத்துள்ளார்.

செம்பியன் செல்வன் இதழியியல் துறையிலும் ஈடுபட்டு, அதில் வெற்றியும் கண்டுள்ளார். 1964 -1970 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் எம்.வி. ஆசீர் வாதத்தினால் ஆரம்பிக்கப்பட்டு, நடாத்தப்பட்ட 'விவேகி' சஞ்சிகையின் ஆசிரியராக இருந்துள்ளார்.

மேலும் ஈழமுரசு மயில் அமிர்தலிங்கத்தினால் நடாத்தப்பட்ட ஈழமுரசு தினசரியின் மாதாந்த இலக்கியச் சஞ்சிகையாக 'அமிர்த கங்கை' 1986 ஆம் ஆண் டில் வெளிவந்தது. 'அமிர்தகங்கை' 12 இதழ்களே வெளிவந்தது. ஆனால் இந்த இலக்கிய சஞ்சிகை இன்றும் இலக்கிய உலகில் பேசப்படுகின்ற தரமுடையதாக இருக்கிறது. இந்தச் சஞ்சிகையின் ஆசிரியராக இருந்தவர் செம்பியன் செல்வன். இங்கு இவரது பணி ஒரு இலக்கிய சஞ்சிகை எப்படித் தரமுடையதாக வெளியிட வேண்டும் என்பதை இதழியல் உலகுக்கு எடுத்துக்காட்டாய் இருந்தமையே ஆகும்.

யாழ். இலக்கிய வட்டம் வெளியீடாக 1966 ஆம் ஆண்டில் முதலாவது ஆண்டு மலராக 'இலக்கியம்' வெளிவந்தது. இந்த மலரின் ஆசிரியர்களாக செம்பியன் செல்வனும், யாழ்.வாணனும் பணியாற்றியுள்ளனர். மேலும் செம்பியன் செல்வன் யாழ்.பல்கலைக்கழகத்தின் பட்டப்பின் படிப்புக் கற்கையின் போது 'கலைஞானம்' என்ற சஞ்சிகை 1982-1983 ஆம் ஆண்டுகளில் வெளிவந்தது. இதன் ஆசிரியராக வும் இவர் விளங்கினார். செங்கை ஆழியானின் 'புவியியல்', 'நுண் அறிவியல்' ஆகிய சஞ்சிகைகளின் இணையாசிரியராகவும் செம்பியன் கடமையாற்றினார்.

செம்பியன் செல்வன் எழுத்துத் துறையில் பல வடிவங்களில் காத்திரமான பங் களிப்புச் செய்திருந்தாலும், சிறுகதைத் துறையிலேயே அவரது பெயர் முதன்மை யானதாகக் காணப்படுகின்றது. அவர் அந்தத் துறையிலேயே அதிகம் பேசப்படுகின் றார். இதனால் ஈழத்து சிறுகதை வளர்ச்சிப் போக்கில் செம்பியன் செல்வன் முக்கியமானவராகக் கருதப்படுகிறார். இவர் படைத்த பல சிறுகதைகள் பரிசு பெற்ற கதைகள் ஆகும். அந்த வகையில் சிலவற்றை நோக்கின்...

* 'இதயக் குமுறல்' (1962) கலைச் செல்வி சிறுகதைப் போட்டியில் முதற்பரிசுக் கதை.
* 'உணர்ச்சிக்கு அப்பால்...' (1963) இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கம் நடாத்திய அகில இலங்கைச் சிறுகதைப் போட்டியின் மூன்றாம் பரிசுக் கதை.
* 'நிலம் யாருக்காகக் காலடியில் கிடக்கிறது?' (1965) இலங்கை வானொலி நடாத்திய சிறுகதை வாரப் போட்டியில் பரிசு பெற்றகதை.
* 'உப்பங்கழி' (1966) வீரகேசரி நடாத்திய அகில இலங்கைச் சிறுகதைப் போட்டியில் மூன்றாம் பரிசு பெற்ற கதை.

* 'பூவும் கனியும்' (1968) ஈழநாடு - 10 ஆவது ஆண்டு விழா மலர் முதற்பரிசு கதை.
* 'மாயாவதியின் கனவு' (நமது ஈழநாடு 01.01.2004) கனகசெந்திநாதன் கதா விருது பெற்ற கதை.

ஆகியவற்றைக் குறிப்பிட்ட போதும் பல சிறுகதைகள் பாராட்டையும்; உயர் இலக்கிய அங்கீகாரத்தையும் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

இவரது சிறுகதை நூல்களாக 'அமைதியின் இறகுகள்', 'சர்ப்பவியூகம்' ஆகியன வெளிவந்துள்ளன. இதில் 'அமைதியின் இறகுகள்' யாழ். இலக்கிய வட்டத்தின் வெளியீடாக 01.12.1966 ஆம் ஆண்டில் வெளிவந்தது. இந்த நூலின் பதிப்புரையில் 'கதைகள் பலவற்றில் தாய்மை உணர்ச்சியின் பல்வகைக் கோலங்கள் கலையழகுடன் அழகாக படம் பிடிக்கபட்டிருப்பதைக் காணலாம்.... குழந்தைகளை மையமாகக் கொண்டு பிரபல தென்னிந்திய எழுத்தாளர்களான ஜெயகாந்தன், லா.ச.ரா போன்றவர்கள் எழுதியது போன்று, இவையும்ஈழத்துக் குழந்தைகளை அவற்றின் ஜனனம், சமுதாய விளைவு என்பவற்றைப் பற்றி ஆழ்ந்து கருத்துப் பார்வை கொண்டவையாக உள்ளன' என்று இரசிகமணி கனக செந்திநாதன் இவரின் எழுத்தை விதந்துரைக்கின்றார். 'சர்ப்பவியூகம்' யாழ். இலக்கியவட்டம் வெளியீடாக 02.07.2002 ஆம் ஆண்டில் வெளிவந்தது. இந்த நூலுக்கு 2003 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இலங்கை சாகித்திய மண்டலபரிசு கிடைத்தது. ஒட்டு மொத்தமாகச் சொல்லப் போனால் செம்பியன் செல்வன் புத்தெழிச்சிக் காலகட்டத்திலும் (1961 -1983), தமிழ்த் தேசிய உணர்வுக் காலகட்டத்திலும் (1983-2000) நூற்றுக்கு மேற்பட்ட நல்ல சிறுகதைகளைப் படைத்து, ஈழத்து இலக்கிய உலகில் முத்திரை பதித்துள்ளார்.

ஆத்ம விழிப்பை ஏற்படுத்தும் வகையில் படைக்கப்பட்ட தத்துவார்த்தச் சிந்தனைப் போக்குடையது தான் செம்பியன் செல்வனின் 'நாணலின் கீதை' இந்த நூல் அபிராமி பதிப்பாக ஜூன் 1982 ஆம் ஆண்டில் வெளிவந்துள்ளது. 42 பக்கங்கள் கொண்ட இந்தச் சிறிய நூலுக்கு கலாநிதி க.கைலாசபதி 11 பக்கத்தில் முன்னுரை எழுதியுள்ளார். இந்தநூல் இன்று வரை மீள்வாசிப்புக்குட்பட்டு வருகிறது. இதில் இருந்து அவர் ஓர் ஆன்மீகவாதியும், தத்துவார்த்தியும் என்பதை இனங்காட்டி நிற்கிறது.

ஆக்க இலக்கியங்களை மட்டும் இவர் படைக்கவில்லை. மாறாக ஆய்வுத் துறையுடன் விமர்சனப்பாங்கான துறைக்கும் பங்களிப்புச் செய்துள்ளார்.

இவரது 'ஈழத் தமிழ்ச் சிறுகதை மணிகள்' எனும் நூல், விமர்சனப் போக்குடையதே. இது ஜூலை 1973 ஆம் ஆண்டில் முன்னோடிகள் கலை இலக்கிய விமர்சகர் குழு வெளியீடாகும். செம்பியன் செல்வன் இந்தக் கட்டுரைகளை விவேகி ஏட்டில் தொடராக எழுதி வந்த போது தமிழகத்தின் மூத்தபடைப்பாளி வல்லிக் கண்ணன் (1966) 'பயனுள்ள இலக்கிய விமர்சன முயற்சி. ஈழத்தில் விமர்சன இலக்கியம் புதிய நோக்கில் வளர்ந்து வருகிறது என்பதற்கு மேலும் ஒரு எடுத்துக்காட்டு உங்கள் முயற்சி'. என்று குறிப்பிட்டுள்ளார். சிறுகதை இலக்கிய வரலாற்றில் இந்த நூல் முக்கியமானது ஆகும்.

இவர் 'ராஜகோ' என்ற புனைபெயரில் பல கவிதைகளையும் எழுதியுள்ளார். இன்னும் பல புனைபெயர்களில் கட்டுரைகள் - குறுங்கதைகள்- விமர்சனங்கள் போன்ற பலவும் படைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

வீரகேசரி வெளியீடான செங்கை ஆழியானின் 'வாடைக்காற்று' நாவலை மூலக் கதையாகக் கொண்டு, அவரது அனுமதியுடன் செம்பியன் செல்வன் திரைக் கதை உரையாடல் எழுத்துப் பிரதியை தயாரித்தார். இந்த எழுத்துப் பிரதியை

இலங்கை அரச திரைப்படக் கூட்டுத்தாபனம் ஈழத்திரைப்பட வரலாற்றிலேயே முதன்முறையாக A தரமுடையதாகத் தெரிந்து ரூபா 1,84,000 மான்யம் வழங்கி யது. இவர் தொடர்ந்தும் ஈழத்திரைப்படக் குறும்படங்களிலும், அவை தொடர்பான வழிகாட்டல் விரிவுரைகளிலும் கணிசமான பங்களிப்புச் செய்துள்ளார்.

செம்பியன் செல்வன் 1960 ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகம் சென்று 1964 ஆம் ஆண்டில் புவியியல் சிறப்புப் பட்டதாரியாக வெளிவந்த இவர், ஒரு கல்வி டிப்ளோமா பட்டதாரியுமாவார். இவர் முதலில் திருகோணமலை சென்.ஜோசப் கல்லூரியிலும் பின்னர் செட்டிக்குளம் மகாவித்தியாலயத்திலும் , அதன் பின் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் ஆசிரியராகக் கடமை புரிந்தார். பின்னர் இலங்கை அதிபர் சேவையில் முதலாம் தரத்தில் சித்தியடைந்து யாழ்ப்பாணம் செங்குந்தா இந்துக்கல்லூரியின் அதிபராகவும் பின்னர் யாழ்ப்பாணக் கோட்டக் கல்விப்பணிப்பாளராகவும் பணியாற்றி ஓய்வு பெற்றார். இவர் நல்மாணாக்கரை உருவாக்கும் ஆசிரியத்துவப் பணியுடன் நின்று விடாது; பல இலக்கிய அமைப்புக்களிலும் தனது பணிகளை விரிவுபடுத்திக் கொண்டார். அந்த வகையில் யாழ். இலக்கிய வட்ட தாபக செயலாளராகவும் மத்திய குழு உறுப்பினராகவும் இருந்துள்ளார். மற்றும் இலங்கைத் தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின் தலைவராகவும் இருந்து ஆற்றிய சேவைகள் என்றும் மனங்கொள்ளத்தக்கது.

1963 ஆம் ஆண்டில் ஈழத்தின் சிறந்த சிறுகதை ஆசிரியர்களை கொழும்புத் தமிழ் எழுத்தாளர் மன்றம், தமிழறிஞர் கா.பொ.இரத்தினம் அவர்களைக் கொண்டு விருது ஆடை போர்த்திக் கௌரவித்தபோது செம்பியன் செல்வனும் கௌரவிக்கப் பட்டார். அப்போது அவருக்கு வயது இருபது ஆகும். 2003 ஆம் ஆண்டில் இவர் தனது மணிவிழாவினைக் கொண்டாடிய போது யாழ். கத்தோலிக்க கலைஇலக்கிய வட்டம் 'இலக்கிய வித்தகர்' என்னும் பட்டத்தைக் கொடுத்து கௌரவித்தது. மற்றும் இந்த விழாவில் கலந்துகொண்ட இலக்கியப் பேரறிஞர்கள் பலரும் இவருக்கு பொன்னாடை போர்த்தி, பரிசில்கள் வழங்கி சிறப்புரைகள் ஆற்றியமை இன்றும் என் மனக்கண்களில் பசுமையாக இருக்கிறது.

ஒரு கருப்பொருளைக் கொடுத்தால் அதனை பல்வேறு கோணங்களில் பேசும் ஆற்றல் கொண்டவர் தான் செம்பியன் செல்வன். இவர் இலக்கியம் - ஆன்மீகம்- சமூகவியல்- உளவியல்- அறிவியல்- நூல் விமர்சனம் போன்ற அனைத்துத் துறை சார்ந்தும் மிக ஆழமாக பேசுவதற்கு வல்லமையுடையவர். இவர் ஒரு இந்துவாக இருந்த போதிலும், பிற சமயங்களின் அடிப்படைத் தத்துவ உண்மைகளை அறிந்து கொண்டவராக இருந்தார். ஏனைய சமயத்தவர்களையும் மதித்துப் போற்றுகின்ற தன்மையும், அந்தந்த சமய விடயங்களைத் துருவித்துருவி ஆராய்ந்து சமயங் களுக்கிடையிலான ஒற்றுமைகளைக் கண்டுபிடித்து, அவற்றைப் பற்றி உரையாடு கின்ற இயல்பும் கொண்டவர்.

1974 ஆம் ஆண்டில் செம்பியன் செல்வன் யாழ்ப்பாணம் அத்தியடியைச் சேர்ந்த சந்தியாப்பிள்ளை பொன்னம்மா ஆகியோரின் புதல்வி புவனேஸ்வரியைத் திருமணம் செய்து கொண்டார். இவர் குடும்பத்தை ஓர் பல்கலைக்கழகமாக மாற்றி யமைத்தவர். மனைவி மீது கொண்ட அன்பும், தன் ஒரே மகனான இராகுலன் மீது கொண்ட பற்றும் பாசமும் வார்த்தைக்குள் அடக்கிவிடமுடியாது. வீட்டுக்கு வருகின்ற வரை அன்புடன் வரவேற்று மகிழ்ந்து உபசரிக்கும் உயர் மானிடப் பண்பு இவரிடம் நிறையவே உண்டு. உறவினர் மீதும், எழுத்தாளர் மீதும் அளவுகடந்த கரிசனை

கொண்டு சுகநலம் விசாரிப்பதிலும், உறவைப் பேணுவதி லும் அக்கறை காட்டுபவர்.

இவர் சமூக இழிநிலை கண்டு பொங்கி எழுந்து அதனைத் துணிந்து கூறுகின்ற இயல்பு கொண்டவர். எப்போதும் தன் கருத்தியலில் இருந்து மாறுபட்டதில்லை. இவர் இலக்கிய உலக நண்பர்களுடன் விமர்சன ரீதியாக முரண்பட்டுக் கொண்டாலும், அதனை காழ்ப்புணர்வுத் தன்மையுடன் பகைவளர்க்காது நட்பினைத் தொடர்ந்தும் பேணிக்கொண்டவர்.

செம்பியன் செல்வன் சகல வயதினருடனும் அவர்களது தரத்திற்கு ஏற்ப பழகுகின்ற தன்மையும்; இளம் எழுத்தாளர்களை ஊக்குவிக்கின்ற தன்மையும்; தான் அறிந்து கொண்ட புதிய விடயங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளும் அதேநேரம் தெரியாத விடயங்களையும் கேட்டுத் தெரிந்து கொள்ளும் இயல்பும் கொண்டவர். இவர் எதையும் உள்ளொன்று வைத்து புறம் ஒன்று கூறுபவர் அல்ல, வெளிப்படையாகவே எல்லா விடயங்களையும் கதைக்கின்ற இயல்பினன்.

இவர் ஓர் சாப்பாட்டுப் பிரியரும் கூட. எல்லா வகைச் சாப்பாட்டையும் பற்றி கதைப்பவர். அதன் சுவை, தயாரிக்கும் முறை எல்லாம் அவருக்கு நன்கு தெரியும். முற்காலத்து உணவு வகைகள் இன்று இல்லாமல் போனதுகுறித்து பெரிதும் ஆத்திரப்படுபவர். இத்தகைய இயல்பு கொண்ட இவரால் இறுதிக்காலத்தில் எந்த உணவையும் நன்கு சுவைத்து உண்ணமுடியாமல் போனது பெரும் கவலையே. இவ்வாறு இருந்த போதிலும் தனது சுயத்தை வளர்ப்பதற்கு தனது இறுதி மூச்சு வரை நல்லதொரு படிப்பாளராக இருந்துள்ளார்.

இவர் பழைய புத்தகக் கடைக்குச் சென்று மிக அரிதான புத்தகங்களைப் பெற்றுக் கொள்வதிலும், நூலகங்களில் புத்தகங்களைப் பெற்று வாசிப்பதிலும் ஆர்வமுள்ளவராகவும் அதனைப் பகிர்வதிலும் முன்னின்றார். இது இளம் படைப்பாளர்களுக்கு ஓர் முன்மாதிரியே ஆகும்.

இப்படிப்பட்ட பல ஆளுமைக் கூறுகள் கொண்ட செம்பியன் செல்வன் 20.05.2005 ஆம் ஆண்டில் அமரத்துவம் அடைந்தார்.

இவர் அமரத்துவம் அடைந்த போது தமிழீழ தேசியத்தலைவர் 'நாட்டுப்பற்றாளர்' என்ற கௌரவத்தினை வழங்கியுள்ளார் .செம்பியன் செல்வன் தமிழ் தேசிய விடுதலைக்காக தனது பேனாமுனையைக் கொண்டு போராடிய உயர் வீரன் என்பதனை இக் கௌரவம் எடுத்துக்காட்டுகிறது.

பிறந்தவர் அனைவரும் இறப்பது நியதி. ஆனால், இறந்தும் வாழ்பவர் உலகினில் அரிது. அந்த வகையில் செம்பியன் செல்வன் இறந்தும் வாழ்கின்ற தன்மை கொண்டவராக இருக்கின்றார்.இவரது பன்முக இலக்கியப் படைப்புக்கள் மரணத்துக்கு அப்பாலும் இவரை வாழ வைக்கும். நாவல்- சிறுகதை - குறுங்கதை- உருவகக்கதை- திரைப்படம்- நாடகம் - பேச்சு - விமர்சனம் - ஆன்மீகம் இவ்வாறு அனைத்துத் துறையும் இவர் நாமம் சொல்லும் என்பது உறுதி. இவரது ஆத்மா சாந்தி பெற இறைவனை பிரார்த்திப்போம்.

**- வி.பி.தனேந்திரா.**

# அஞ்சலி குறிப்பூக்கள்

## இவர்கள் பார்வையில் செம்பியன்



செம்பியன் செல்வன் எந்தப் புதிருமற்று தெளிவுற வெளியே தெரிந்த மனிதன். வாழ்வுக்கும், தன் எழுத்துக்கும் பேதமற்றிருந்த எழுத்துப்போராளி. அழகான, ஆழமான கதைசொல்லி, பெரிதான கனவேதுமற்று, கொத்துக்களவான வாழ்வின் வாசலில் வரைந்திருந்த கோலம். தன்னைச் சுற்றி ஒளிவட்டம் உருவாக்கி காலம் முழுதுக்கும் தானே கட்டியக்காரனாகும் எத்தனிப்பற்ற ஒருவர். படைப் பாக்கத்தைத் தவமாகக் கருதி, அதனோடு தான் கலந்து நின்றவர். தன் இனத்தையும், நிலத்தையும் அளவுக்கதிகமாகவே நேசித்த அதே வேளையில், உலகளாவிய மானுட நேசிப்பையும் வரித்துக் கொண்ட வர். எந்தத் தளைகளாலும் கட்டிறுகுவதைச் சகித்துக் கொள்ளாதவர். மனிதம் நோவுறும் போதும், ஆதிக்கம் படர்ந்தழுத்தும் வேளையும் பேசாதிருந்து விட்டு காலம் சாதகமாகும் போது கடைவிரிக்கும் நடைபாதை வியாபாரியாக செம்பியன் என்றும் இருந்ததில்லை.

அநீதிக்கெதிரான முதற்குரலாக இவரின் குரல் எம்முடன் இருந்தது. நல்ல மனிதனாகவும், நல்ல நண்பனாகவும், நல்ல படைப்பாளியாகவும், நல்ல நாட்டுப்பற்றாளராகவும், இப்படி நல்ல நல்லவாகவே செம்பியன் செல்வன் இருந்தார். மூச்சிழக்கும் வரை. படைப்பாளுமை மிக்க பலர் இருக்கின்றனர்தான். ஆயினும் உண்மையொளிரும் மனிதர் அருந்தலாகவே இருக்கின்றனர். அருந்தலானவர்களில் ஒருவர் இவர். இவரின் இழப்பு ஈடுசெய்து இடைவெளி நிரப்பமுடியாததாக நெடுங்காலம் இருக்கும். செம்பியன் செல்வனின் பிரிவை என்னால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. வலிதான, வலியான சோகம் உள்ளே அழுத்த, ஓரிரு நாட்கள் கழிந்தன. இன்று அவரின் பிரிவுச்சோகம் கொஞ்சம் கொஞ்சமாகக் கரைகிறது. ஆயினும் பழகிய அந்த இனிய நாட்களின் நினைவுகள் அடிக்கடி மேலெழுந்து வந்து தொல்லைப்படுத்துகிறது. இனியும் தொல்லைப்படுத்தும், சோகம் தரும் என் இறப்புரை எனக்கு.

– புதுவை இரத்தினதுரை.



என்றும் அழியா அழகே!
எந்தவிதமான ஆடம்பரமுமில்லை
ஆனால்
ஆழமான ஆத்மவிசாரணை தந்த மிடுக்கு.
எந்தவிதமான அதிகார குறியீடுகளுமில்லை
(அந்த 'புல் சிலீவ் சேட்'டைத்தவிர)
ஆனால்
கல்வி - கலை - இலக்கிய முழுமை நோக்கிய
அதிகாரமான கருத்தியல் வெளிப்பாடு....
இந்த வல்லமைகளின்
ஆதார சக்தியாக நிறைந்த அன்பின் கனிவு
செம்பியன் செல்வன் ஆளுமை தனியானது
சமூக பயனான அவன் வாழ்வு பெறுமதியானது
அவனுடனான
உறவின் கணங்கள் உன்னதமானவை
என்றும் அழியா அழகானவை....

பேராசிரியர் என்.சண்முகலிங்கன்
சமூகவியல் பேராசிரியர்
தலைவர்/ அரசறிவியல் - சமூகவியல்துறை
யாழ்.பல்கலைக்கழகம்.

---

ஈழத்தின் பல்வேறு இலக்கிய அமைப்புக்களை ஒன்றிணைத்து உருவாக்கப்பட்ட தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின் தலைவராகச் செயற்பட்டு வந்ததுடன், படைப்பாளிகள் இடையேயான கலந்துரையாடல்களை ஏற்படுத்துவதிலும், இளம் எழுத்தாளர்களை ஊக்குவிப்பதிலும் முன்னின்றார். மாற்றுக்கருத்துக்களுக்கு மதிப்பளிப்பது, மனித நேயத்துடன் மனந் திறந்து பேசி உறவாடுவது இவரது நற்பண்பாக இருந்தது. நல்ல இலக்கியங்களைத் தேடிக் கற்பதுடன், அவற்றை மற்றவர்களையும் கற்பதற்குத் தூண்டி ஊக்குவிக்கும் இயல்பையும் இவர் இறுதிவரை பேணி வந்தார். இத்தகைய ஒரு இலக்கிய நண்பரின், மூத்த எழுத்தாளரின் இழப்பு ஈழத்து இலக்கிய உலகுக்குப் பெரும் இழப்பாகும்.

க.தணிகாசலம்
ஆசிரியர் - தாயகம்
தேசிய கலை இலக்கியப் பேரவை.

சத்தியசாயி சேவா நிலையம் தலைவராக இருந்து ஆன்மீக வளர்ச்சிக்கு பங்களித்தவர். சிறந்த எழுத்தாளன். தமிழ் மொழி, தமிழ் மக்கள் உரிமை ஆகியவற்றில் சிறந்த பற்றும், ஈடுபாடும் கொண்டவர்.

**க.கனகரத்தினம்,**
**நிதியாளர்,**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

---

ஒரு இலக்கிய பூ உதிர்ந்து விட்டது. ஈழத்து இலக்கிய உலகிலே என்றும் பேசப்படும் ஒருவராகச் செம்பியன் செல்வன் இருப்பார்.

**கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா,**
**தமிழ்த்துறை,**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

---

அமரர் இராஜகோபால் அவர்கள் ஆற்றிய சமூக இலக்கிய கல்விப் பணிக்கு நன்றி கூறுகிறேன். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறேன்.

**ப.விக்னேஸ்வரன்,**
**வலயக்கல்விப் பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயம்.**

---

தமிழினத்தின் சொத்தான, முத்தான படிப்பாளரை - படைப்பாளியை, பகுத்தறிவாளனை இழந்து நிற்கின்றோம்.

**சூ.சிறில்,**
**தேசிய எழுச்சிப் பேரவை,**
**யாழ்ப்பாண மாவட்டம்.**

---

ஆசிரியர் அவர்கள் எமக்கு நிறையவே மதிப்புரைகள் வழங்கியவர். தனது வேலைப் பழுக்கள் மத்தியில் நேரத்தினை ஒதுக்கி, எம்மோடு பழகுகின்ற தன்மை, எம்மையெல்லாம் இன்று விட்டுப் பிரிந்த செய்தியானது மிக வேதனையுறச் செய்து விட்டது.

**மு.மயூரன்,**
**யாழ்ப்பாணம்.**

---

மனித நேயமிக்க படைப்பாளியாகவும், தேடல் நிறைந்த இலக்கிய அறிஞனாகவும் போற்றக்கூடிய 'அண்ணா' செம்பியன் செல்வன் எனது தந்தையாரின் அன்பிற்குரியவராகத் திகழ்ந்தார். இவரின் மறைவு ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்குப் பேரிழப்பாகும்.

**வே.ஐ.வரதராஜா,**
**(கவிஞர், வே.ஐயாத்துரையின் புதல்வன்)**

சிறு குழந்தை போல் மக்களின் துயரங்களை ஆணித்தரமாக மற்றவர்களிடம் வினாவுவார். ஆனால் மிகவும் ஆழமான கருத்துக் களைக் கொண்டதாக அன்னாரின் வினாக்கள் அமையும். எனக்கு மிகவும் பழகக்கூடிய ஒரு நிலை ஏற்பட்டது.

**ச.சிவஞானசேகரம்.**
**தேசிய எழுச்சிப் பேரவை (செயலாளர்).**
**யாழ்.பிரதேசம்.**

---

35 வருட நட்பு துயில்கின்றது. ஆயுதங்கள் முழைக்க முன்பே, எழுத்தை ஆயுதமாக்கிய எழுத்தாளன். தமிழனின் விடுதலைக்காக உறங்காமல் எழுதிய உயிர்ப்பூ.

**பூ.புலேந்திரராசா.**
**நல்லை அமிழ்தன்.**

---

இராஜகோபால் மிகவும் குழந்தையுள்ளம் படைத்தவன். எனது பிள்ளைகள் இவர்மேல் மிகுந்த அன்பு கொண்டவர்கள். இவரது கதை கேட்பதில் இவருடன் உரையாடுவதில் மிகுந்த விருப்பம் கொண்ட வர்கள். எங்களது குடும்பத்துடன் மிகவும் நெருக்கமாக இருந்துவந்தார்.

**பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை.**
**முன்னாள் துணைவேந்தர்**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

---

தான் வாழும் காலம் வரைக்கும் இலக்கியத்துக்காகவும், அதன் வழி சமூகத்தின் மீது ஆர்வமும் பற்றும் கொண்ட ஒரு படைபாளியாய் மிளிர்ந்தவர்.

**த.அஜந்தகுமார்.**
**(வதிரி)**

---

அமரர் இராஜகோபால் தமிழ் உலகிற்கு ஆற்றிய சேவை அளப்பரியது. அவரது இழப்பு ஈடு செய்யமுடியாதது. அவரது ஆத்மா சாந்தி பெற வேண்டுகின்றோம்.

**பி.பி.பிறின்ஸ்.**
**ரி.எம்.அந்தோனிப்பிள்ளை (சட்டத்தரணி)**

---

பதவி வழி என் முன்னவன், எழுத்துலகின் என்னவன், பல்துறை ஆற்றலில் மன்னவன், மண்ணில் வாழ்ந்த போது மக்களையும் மண்ணையும் நேசித்த பண்பாளன்.

**எஸ்.எஸ்.தங்கராஜா.**
**யாழ்.கல்விக் கோட்டப் பணிப்பாளர்.**

செம்பியன் செல்வன் தனக்குரிய தனித்த கருத்துக்களில் உறுதியாக நின்ற கிளர்ச்சிக் குணங்கொண்ட ஒருவர். இந்த ஆதார உன்னத கலை-இலக்கியம், அரசியல், சமூகம் போன்ற தளங்களில் பேச்சு, எழுத்து, செயல் ஆகிய வடிவங்களில் உறுதியாக வெளிப்பட்டது. சமரசமேது மின்றி எமது இலக்கியச் சூழலில் அரிதாகக் காணப்படும் இப்பண்பு மரியாதைக்குரியது. இதனைக் கொண்டிருந்த நண்பன் செம்பியனும் மரியாதைக்குரியவர்.

**அ.யேசுராசா.**
**குருநகர்.**

---

நின்னோடு பழகிய நாட்கள் நினைவை விட்டகலாத நாட்கள். நினது தேசப்பற்றும், இலக்கிய வாழ் வும் என்றென்றும் எம் எல் லோருக்கும் வழிகாட்டியாக அமையட்டும்.

**எஸ்.ரி.அரசு.**

---

நல்ல மனிதர், நல்ல படைப்பாளி. இனிமையாகப் பேசும் இயல்பினர், தன்னைப்பற்றிய கணிப்பையும் நண்புர்கள் பற்றிய கணிப்பையும் முதன்மைப்படுத்தி வாழ்ந்தவர். தமிழ்த்தேசிய நலன்களில் மிகு பற்றுடைய பண்பாளர். அவரது பிரிவு துயர்தருவதுடன், பாரிய இழப்பாகும்.

**க.சட்டநாதன்.**
**நல்லூர்.**

---

மனிதத்தை நேசித்த மானிடன். எம்மை விட்டுப் பிரிந்தது எல்லை யில்லாத துயரத்தைத் தந்துள்ளது.

இவர் பிரிவால் இன்று தமிழ் கூரும் உலகத்தில் பாரிய இடைவெளி ஏற்பட்டுள்ளது. திருமறைக் கலாமன்றம் நல்லதோர் நண்பனை இழந்துவிட்டது. நல்லதோர் தேசப்பற்றாளனை இழந்துவிட்டது.

**ஜி.பி.பேர்மினஸ்.**
**திருமறைக்கலாமன்றம்.**
**யாழ்பாணம்.**

---

ஆசிரியர் - மாணவர் என்ற நிலைக்கப்பால் நல்ல இலக்கிய நண்பனாக விளங்கியவர். இறுதிக் காலத்தில் அவருடன் நெருக்கமாகப் பழகியதில் தன் மன அவசங்களை இறக்கி வைக்கும் ஒருவனாகவே என்னைக் கண்டார். என் வாழ்வில் தனிமையில் மிகத் துயருறுத்திய இழப்பு இது மட்டுமே.

**உடுவில் அரவிந்தன்.**

---

இலக்கியத்தில் கலகக் காரனாக விளங்கினாலும், எல்லோருடனும் அன்புடன் பழகி நட்புப் பாராட்டும் பண்புடையவர். இளம் படைப்பாளிகளை நட்புணர்வோடு அணுகி, அவர்களை வளர்த்தவர். ஈழத்திலக்கியம் தனது அத்தியாயம் ஒன்றை இழந்துவிட்டது.

**இயல்வாணன்.**
**சுன்னாகம் தெற்கு.**
**சுன்னாகம்.**

---

மொழி நாட்டுப்பற்று மிகுந்த தமிழ் மகன். நல்ல சிந்தனையாளன். சிந்தித்தவற்றை எவருக்கும் பணியாது, உள்ளடக்காது துணிந்து கூறும் இயல்பு கொண்டவர். தமிழினம் பல அல்லல்களைச் சந்தித்த வேளையில் இனத்தின் கெடுபிடிகளை உலகறியச் செய்ய பல வழிகளிலும் தனது எழுத்துக்களினால் வலுப்படுத்தியவர்.

**கலாபூஷணம் செ.மெற்றாஸ்மயில்.**
**செயலாளர்.**
**பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம்.**

---

பேராதனை பல்கலைக்கழகத்தில் நான் புகுந்த வேளை, நான் எழுதிய கதை ஒன்று அங்கு பேசப்பட்டதைக் கண்டு மருண்ட வேளை, அப்பொழுது கிடைத்த திரு.செம்பியன் செல்வனின் நட்பே எனக்குத் தெம்பையும், எதையும் எதிர்கொள்ளும் துணிச்சலையும் தந்தது என்பதை என்றுமான நன்றியுடன் நினைவு கூருகிறேன்.

**குந்தவை**
**தொண்டமனாறு.**

---

நான் நீண்ட காலமாக மனிதனைத் தேடினேன். நான் இதுவரை கண்ட மனிதன் உயர் திரு.இராஜகோபால் அவர்களே.

**இ.க.சதாசிவன்.**
**நவாலி.**

---

ஈழத்தின் சிறந்த எழுத்தாளரும், துணிச்சல்மிக்க விமர்சகரும் எம்மோடு அறுபதுகளில் எழுதத் தொடங்கியவருமான சிறந்த நண்பரான செம்பியன் செல்வனின் மறைவு துயரம் மிக்கது.

**பொ.சண்முகநாதன்**
**(சண்.அங்கிள்)**

நாடறிந்த எழுத்தாளர், ஆசிரியர், அதிபர், கோட்டக்கல்வி அதிகாரி, நாட்டுப்பற்றாளர், மனித நேயமிக்கவர் என்ற பல கோணத்தில் இருந்து சொல்லக்கூடிய ஒருவரை இழந்தது மிகவும் பாரிய இடைவெளியாகும்.

**த.பஞ்சலிங்கம்.**
**சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர்.**
**இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்.**

பல்கலைக்கழக நாட்கள் முதல் பழகிய ஒருவர் என்பதுடன் மாத்திர மன்றி, அதன்பின்பு எங்கு கண்டாலும் மிகுந்த பண்புடனும் மதிப்புட னும் பழகித் தாம் எல்லாத்துக்கும் மேலாக ஒரு படைப்பாளன் என்பதை எழுதியதை என்றென்றும் நினைவு கூறுவேன்.

**பேராசிரியர் வி.நித்தியானந்தம்.**
**பொருளியற்துறை.**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

பல்கலைக்கழகத்தில் செம்பியன் செல்வன் என்ற புனைபெயரில் நீங்கள், தமிழ் இலக்கியத்துக்கு ஆற்றிய பணி எங்கள் எல்லோருக்கும் பெருமை தந்தது.

**வெற்றிவேலு நல்லைநாயகம்.**
**(கனடா)**

இவர் ஒரு விடயத்தைப் பற்றி உரையாடுகின்றவர் அல்ல. மாறாகப் பல விடயங்களைப் பற்றி உரையாடுகின்ற இயல்பு கொண்டவர். நான் இவரது வீட்டில் அடிக்கடி சந்தித்துக் கதைத்த பசுமையான காலத்தை எண்ணி பெருமை அடைகின்றேன். ஏனெனில் அவர் ஓர் நடமாடும் நூலகம்.

**வி.பி.தனேந்திரா**
**ஆசிரியர் - தெளிவு.**

ஆ.இராஜகோபால் சிறந்த இலக்கிய எழுத்தாளர். எனது நெருங்கிய நண்பன். நானும் செம்பியனும் ஒன்றாக யாழ்.இந்துக் கல்லூரியில் கல்வி கற்பித்தோம். பின்பு நான் யாழ்.செங்குந்தா இந்துக் கல்லூரிக்கு உப அதிபராக இருக்கும்போது செம்பியன் அதிபராக பணியேற்றார்.

**த.நாகராசா**
**(ஓய்வு பெற்ற அதிபர்)**
**நல்லூர்.**

சமூகவியற்றுறை மற்றும் தமிழிலக்கியத்துறையில் நல்ல ஆழமான அறிவு கூர்ந்த கல்வியதிகாரி செம்பியனின் இழப்பு தமிழ்ப் பிரதேச அறிவுலகத்துக்கு பெரிய இடைவெளியை ஏற்படுத்திவிட்டது.

**கலை ஞானகேசரி எம்.எஸ்.ஹீதயாளன். (ஜே.பி.).**
**மேலதிகப் பணிப்பாளர்.**
**சமயக் கல்வி.**
**இந்துசமய கலாசார திணைக்களம். கொழும்பு.**

---

அன்பு இரக்க சிந்தை சமய -சமூக சேவை என்பன ஒருவரது வாழ்வில் முக்கியமாக அமைந்திருக்க வேண்டியவையாகும். இவையனைத்தையும் ஒருங்கே கைவரப்பெற்றவர் செம்பியன் செல்வன் அவர்கள். இவரது வாழ்வு மறைந்தாலும் இவர் படைத்த இலக்கிய ஆக்கங்கள் இலங்கை தமிழ் இலக்கிய வரலாற்றில் நின்று நிலைத்து அவரது மங்காப் புகழைப் பறைசாற்றும்.

**திருமதி க.பொன்னம்பலம்.**
**அதிபர்.**
**யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.**

---

இலக்கிய உலகில் உண்மையின் உரைக்கல்லாய் திகழ்ந்த செம்பியன் அகவை அறுபதில் 'இலக்கிய வித்தகர்' எனக் கௌரவம் பெற்றார். இவரது வார்த்தையும் வாழ்வும் என்றும் இலக்கிய உலகில் முன்னுதாரண புருசராக மதிக்கப்படுபவர். ஈழத்து இலக்கிய வரலாற்றில் இவரது பதிவுகள் என்றும் நிலைத்து பேசப்படும் என்பதில் ஐயமில்லை. அவரது இல்லம் இலக்கிய தேடல் மிக்க பல்கலைக் கூடமாகி அந்த இலக்கிய முற்றத்தில் இவரது அன் புறவால் இலக்கிய உலகில் புதிதாய் தடம் பதித்தோர் பலர். இவரது இழப்பு இலக்கிய உலகுக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும்.

**செ.யோசப்பாலா.**
**செயலாளர் - யாழ். கத்தோலிக்க கலை இலக்கிய வட்டம்.**

---

இராஜகோபால் நீண்ட நாள் நண்பர். அவர் என்னைக் கண்டதும் நின்று கதைப்பார். அவர் மிகவும் சாந்த குணம் உடையவர்.

**க.இராமானந்தசிவம்.**
**திருநெல்வேலி.**

---

ஈழத்தமிழ் இலக்கியத்திற்கு பேரிழப்பு, தமிழின விடுதலை உள்ளங்களுக்கு அளவற்ற இழப்பு.

**ச.பாலசுந்தரம்.**
**இளைப்பாறிய கல்வி முகாமையாளர்.**

அன்பான மனிதர். வாழ்க அவர் பெயர்.
**எஸ்.பி.கிருஷ்ணன்.**
**மூத்த எழுத்தாளர்.**

---

நல்ல மனிதர், சிறந்த எழுத்தாள,ர் கல்வியில் உயர்ந்தவர், ஆனாலும் கர்வமற்றவர். இனிய உள்ளம் கொண்ட அன்பரை இழந்தது எல்லோருக்கும் பேரிழப்பு.
**சி.கந்தசாமி.**
**பரந்தன்.**

---

தலை சிறந்த இலக்கிய வாதியும், கல்விமானுமாகிய செம்பியன் செல்வனின் இழப்பு தமிழ் ஈழத்துக்கு பெரும் கவலையை அளிக்கின்றது.
**கலாநிதி தி.கமலநாதன்.**
**பீடாதிபதி.**
**யாழ்.தேசிய கல்வியற் கல்லூரி.**

---

செம்பியன் செல்வன் பழகுவதற்கு மிக நட்பானவர்,மனதுக்குள் ஒன்றினைக் கூறத் தெரியாதவர், என்னுடைய பாடசாலை மாணவனாகவும் , பல்கலைக்கழக நண்பனாகவும், என் குடும்பத்தில் ஒருவனாகவும் விளங்கியவர் செம்பியன் செல்வன். இலக்கிய இரட்டையர்களாக வாழ்ந்திருந்தோம். எனக்கும் இலக்கியத்துக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு நண்பனின் திடீர் மரணம்.
**செங்கை ஆழியான் (கலாநிதி க.குணராசா)**
**ஆணையாளர்**
**யாழ்.மாநகரசபை.**

---

Om Sri Sai Ram

Mr A.Rajagopal was a very intelligent speaker, who could speak on any subject on very short notice. He was interested in literary groups; spritural associations and welfare actvities.
S.Sivagnanam,
Former Central Co-od of
Bhavan Sri Sathiya Sai Baba
Sri Lanka.

உரிமையுடன் உறவாடும் போதெல்லாம் மனம் விட்டுப் பேசுவார். அவரது இலக்கிய நண்பர்களின் சந்திப்பு தொடர்பூடக தொடர்பாடல் கொழும்பில் அதிக மகிழ்வை அவருக்கு கொடுத்த போதும் தன்னைச் சூழ்ந்தவர்களின் உயர்வில் அதிக அக்கறை கொண்டவராக அவரது இறுதி உரையாடல்கள் அமைந்தது. நாம் இவருடன் இறுதிக் காலத்[illegible]தித்துப் பிரிந்ததை எண்ணிக் கலங்குகின்றோம்.

**அமுதமொழியான் செம்பியனை**

---

அடிக்கடி வீதிவழியில் சந்திப்பேன். சந்திக்கும் போதெல்லாம் நேரம் போவதே தெரியாது. எந்த விடயங்கள் பற்றிப் பேசினாலும் ஆழ்ந்த அறிவுப் புலமையுடன் கருத்துக்களை முன்வைப்பார். நல்லுறவை வளர்ப்பதில் சிறந்த மனிதநேயமிக்கவர்.

**கானமயில்நாதன்**
**பிரதம ஆசிரியர்**
**உதயன்**

---

செம்பியன் செல்வன் என்கிற இலக்கிய வாதிக்குமப்பால் நல்லதொரு குடும்பத்தலைவன்/ ஆசிரியன்/ புவியியலாளன்/ நிர்வாகி/ பத்திரிகை ஆசிரியன்/ ஆன்மீகவாதி/ நண்பன் இவையெல்லாவற்றிற்கும் மேலான பற்றுறுதி மிக்கதோர் தமிழ்த் தேசிய வாதி என மிளிர்ந்தார்.

செம்பியன் செல்வனின் படைப்புகள் ஆர்வம்/ ஆற்றல் என்பவற்றுக் கப்பால் உணர்வு உண்மை என்ற விடயங்களிலும் வேர்விட்டவை. எனவே இவை காலத்தை வென்று நிலைக்கப் போவது ஒன்றும் அதிசயமானதன்று.

**சாந்தன்.**

---

தமிழ் இலக்கியத்தின் பல்வேறு முகங்களில் தன்னை வெளிப்படுத்தியவர் செம்பியன் செல்வன். நாடகத்துறை திரைப்பட வசன அமைப்பு உருவகக் கதைத்துறை விமர்சனத்துறை நாவல் எனப் பல வடிவங்களில் அவர் தமிழ் உலகிற்குச் சிறந்த பங்களிப்புச் செய்துள்ளார். பத்திரிகை சஞ்சிகை ஆசிரியராக இணைஆசிரியராக இருந்து மாணவ உலகிற்கும் சிறந்த தொண்டாற்றியுள்ளார். இவரின் பணி, காலத்தால் அழியாதது. ஆசிரியராக / அதிபராக / கோட்டக் கல்வி அதிகாரியாகப் பணியாற்றிப் பலரின் நன் மதிப்பையும் பெற்ற இவர் ஈழத்துத் தமிழரின் நினைவில் நீங்காத இடம் பெறுவார் என்பதில் ஐயமில்லை.

**திருமதி. பி. எவ். சின்னத்துரை**
**இளைப்பாறிய அதிபர்.**

இவரோடு சந்தித்து உரையாடிய நாட்கள் என்றும் மறக்க முடியா தவை. சகல எழுத்தாளர் க ளை யும் ஒன்றிணைக்கும் பாலமாக அவரது இல்லம் காணப்படும். தூய்மையான உறவை இழந்த சோகம் என்னைப் பெரிதும் வாட்டுகிறது.

**விவேக்.**
**கிளிநொச்சி.**

---

சாவின் பின்னும்
எழுத்துலகில்
காலங்காலமாய்,
வாழப் போகின்ற,
இலக்கிய வித்தகருக்கு,
ஈழ நிலம்
மகுடம் சூட்டிட,
நாம் பாமலர்கள்
தொடுத்துச் சாத்துகிறோம்.

**மீசாலையூர்- கமலா**

# அனுதாபச் செய்திகள்....



அன்புள்ள:

திருமதி இராஜகோபால் அவர்களுக்கு ஆசிகள். தங்களுடைய கணவர் திரு.ஆறுமுகம் இராஜகோபாலுடைய மறைவு எமக்கு மனவேதனையைத் தந்தது. செம்பியன் செல்வனாக பல படைப்புக்களை ஈழத்துக்கு தந்து, படைப்புகள் ஊடாக சிந்திக்க வைத்த எழுத்தாளன். ஆசிரியராக, அதிபராக, குடும்பத்தலைவனாக எல்லோருடனும் இனிமையாகப் பழகும் சுபாவமுடைய இராஜகோபாலுடைய மறைவு தங்களுக்கு மட்டுமன்றி, எமக்கும் கவலையைத் தந்துள்ளது. குறிப்பாக யாழ்.இலக்கியவட்டத்தைத் தனியாக வழிநடத்தி, பல இலக்கிய நூல்களை வெளியிட்டவர். இவருடைய மறைவால் துயருற்று இருக்கும் பிள்ளைகளை, குடும்பத்தாரை துயரத்தில் இருந்து மீள இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். திரு.ஆறுமுகம் இராஜகோபால் அவர்களுடைய ஆத்மசாந்திய டைய இறைவனைப் பிரார்த்திக்கின் றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

ஸ்ரீலஸ்ரீ.சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்.

---

இராஜகோபால் அவர்கள் ஒரு பொழுதும் தனக்கு மேலே உயர்ந்தவர்களைப் பார்த்து பெரு மூச்சு விடவில்லை. தனக்கு கீழ் உள்ளவர்களைப் பார்த்து பூரண திருப்தியுடன் தனது வாழ்க்கையை நடத்தினார்.

இறைவன் கொடுத்த வாழ்விலே நாம் நமது முத்திரையை பதித்து விட்டுச் செல்லலாம். இதனை நன்கு உணர்ந்து தமது சொல்லாலும் செயலாலும் தனக்கென ஒருமுத்திரையைப் பதித்து விட்டுச் சென்றவர் தான் செம்பியன் செல்வன்.

பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன்.
முதல்வர் கிறிஸ்தவ இறையியல் கல்லூரி.
மருதனார் மடம்.

# அனுதாபச் செய்திகள்....



ஒவ்வொரு மனிதனும் பிறக்கின்றான்; இறக்கின்றான். இறந்தவுடன் மக்களால் மறக்கப்பட்டு விடுவான். தன்னளவில் சேவை செய்து திருப்தியடைவோர் பலர். அந்த வகையில் தோன்றிற் புகழுடன் தோன்றுக என்ற வாக்கிற்கமைய வாழ்வாங்கு வாழ்ந்தோர் சிலரில் ஒருவர் தான், ஆசிரியர் ஆறுமுகம் இராஜகோபால் அவர்கள். இவரு டன் சிறிது காலம் பழகியிருப்பேன். ஆனால் குருக்கள் என்ற சொல் வருமுன் சிரம் தாழ்த்தி கைகூப்பி வணங்கிச் செல்வார். அவரின் பக்தி, அறிவு, பண்பு, ஆளுமை மாணவர்களை உயர்ந்த நிலைக்கு ஏற்றி வைக்கும் ஏணியாக போற்றப்பட்டு வந்தார். ஆனால் ஆண்டவன் ஏணியை மறுபக்கம் சாய்த்து வைத்துவிட்டார். மாணவர் கலக்கம் உற்றார். மனைவி தலை விரித்தாள். மைந்தன் மனங்கலங்கி அழத் தொடங்கினான். உற்றார் உறவினர்கள் பதற்றம் உற இறைபதம் நாடி விட்டார். யானும் அறிந்தவுடன் மிக்க கவலையடைந்தேன். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்து அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி அமர்கின்றேன்.

*சாந்தி! சாந்தி! சாந்தி!*

சிவஸ்ரீ நா.யோகீஸ்வரக் குருக்கள்,
யாழ்.அத்தியடி விநாயகர் ஆலய பிரதம குருக்கள்,


---

குழந்தையுள்ளம் கொண்ட செம்பியன் செல்வன் அவர்கள், தனக்குச் சரி என்று தெரிந்ததை வெளிப்படையாகச் சொல்லும் இயல்பு கொண்டவர். தனக்கு ஏற்படும் சந்தேகங்களை எவரிடமும் கேட்டுத் தெரிந்து கொள்ளும் ஆர்வம் மிக்கவர். பார்வையில் சேவகனாய் பண்பிலே தெய்வமாக வாழ்ந்தவர். பிறர் அன்பு பணிவு தன்னடக்கம் போன்ற உயர்ந்த குணங்களால் தனது வாழ்வை அணி செய்தார். எமது பாடசாலையில் நடைபெறும் நிகழ்ச்சிகளைப் பார்வையிட்டு சிறுவர்களோடு சிறுவராகத் தானும் கதைத்து அளவளாவி தட்டிக் கொடுப்பார்.

**அருட்செல்வி ஜீ.செல்வராணி,**

**அதிபர்- யாழ்.புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்.**

# சிறு பொறியினின்று எழும் பெரு நெருப்பு....



நீர் தீயில் வேகும் வேளையில் ஒரு சிறு பொறி என் நெஞ்சில் விழுந்த தையா? கணப்பொழுதில் தீக்கிரையாகி பஸ்ப மானீர். காலப்போக்கில் நானும் அது வாகி விடுவேன். பசுமையான நம் இள நினைவலைகள் நெஞ்சில் மோதுதையா.

அன்று நீர் மேடையில் முட்டையால் அடிவாங்கி, நண்பனுடன் நின்ற நிலைகண்டு ஓடிச்சென்று பெட்டகத்தின் கீழ் ஒளித்துக்கொண் டேன். சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு என் அருகில் வந்து கன்னத்திற்கிள்ளி காதுக்குள் மெல்ல செம்பியன் தேவதைக்கு பயமா? என்றீர். ஒரு சில மணி நேரத்தில் புகை வண்டியில் புறப்பட்டு விட்டீர்.

கிளித்தட்டு விளையாட்டில் அடி தந்த கையா, கெந்திப் பிடிக்கை யில் குட்டிய கையா, பாடம் சொல்லித் தந்த போது கிள்ளிய கையா? கைவிரலின் மென்மை அன்றுதான் உணர்ந்துகொண்டேன். வெள்ளைச் சட்டைக்குள் தெரிந்த முகத்தில் கனிவையும், அன்பையும், வாழ்வையும் அறிந்து கொண்டேன்.

செம்பியனும், செங்கையாழியனும் சேர்ந்து எழுதிய தொடர் கனத நிழல்கள் புவனம், ராஜா, பாலா கதையில் உயிர் கொடுக்கும் பாத்தி ரங்கள். புவனம் இராஜகோபால் அன்பால் சேர்ந்து இளைத்த நிஜங்கள் என்றும் பொய்யாகக் கூடாதவை. பொய்யாக்கிவிட்டனர் கதாசிரியர்கள்.

கதையில் இராஜகோபால் பெண்களைச் சந்திக்கும் வேளையில் வாய்திறவா மௌனி ஆகிவிடுவேன். வாய் திறக்க வைக்க நீர்படும் பாடு, இன்று வாய்திறந்து அலறுகின்றேன். நீர் வாழும் எழுத்துலகில் சட்டங்கள் திட்டங்கள் புதுவழிமுறைகள் வகுத்தீர், இமை மூடித் திறப்பதற்குள் நான்கு மரச் சட்டத்திற்குள் அழகாக புகுந்துகொண்டீர். பொட்டிட்டு பூத்தந்து மண வாழ்வு தந்தீர், நீர் போகையில் யாவற்றையும் உமதாக்கிக் கொண்டீர். பத்திரமாய் காத்து வையும் நான் வரும்வரை. திருக்குறளின் வரிகளைப் பெருமைப்படுத்தியவரே. என்ன தவம் செய்தனரோ உம்மை மகனாய் பெற. நினைவாக, நிறைவாக மறைந்து நிற்கின்றாய். வந்தோரின் வாய்மொழிகள் சாகாவரம் தந்ததையா. உங்கள் புகழில் மலர்ந்த விழிகள் உம் நினைவால் வாழ உதவுதையா.

உன் ஆத்மா நிறைவு பெறவில்லை. உம் மூச்சு இன்னும் ஓயவில்லை. உம் தணியாத தாகப் பெருமூச்சு நெஞ்சின் சிறு பொறியை தீயாக்கு தையா, பெரு நெருப்பாய் ஆகுமுன்னே விடியலைத் தேடும் வெண் புறாவைப் பறக்கவிடு.

**என்றும் உன் புவனம்.**

# தமிழிற்காய் வாழ்ந்த வாழ்வு....



பிறந்த பிறப்பினை தமிழிற்காய் ஈந்து சென்று விட்டீர். உம்மைப் பிரிந்து தவிக்கும் மனைவி பிள்ளையின் துன்பம் தாங்கவில்லை எமக்கு. கடல் கடந்து நாம் இங்கு வாழ்ந்தாலும் உம் பிரிவுத் துயர ஒலிகள் காதுவரை ஓடிவந்து மனதைத் தட்டி விம்ம வைக்கின்றதையோ.

வாழ்ந்த வாழ்விற்கு பெருமைதேடி நீர் மறைந்தீர். வாழும் உறவுகள் மனம் வாடி அழுகின்றது தெரிகின்றதா? இவர் உங்கள் பெரியப்பா என்று முகம்காட்டி மகிழமுன்னம்,ஊர் கூடி, உம்புகழ் பாடி காடு கடத்திவிட்ட காட்சியினை ஏன் விதைத்தீர் எம் கண்ணில்.

அழுது அழுது ஓயவில்லை. நினைத்து நினைத்து மாளவில்லை. திடமனதைத் தந்துடுவீர் உம் துணைவி, பிள்ளை, உறவினருக்கு. வாழ்ந்த போது உம் பணியில் நல்ல முத்து மாணவர்களை நீர் விதைத்தீர். வாழ்வு முடியும்வரை தமிழிற்காய் துணைநின்றீர்.

உம் நினைவுகள் எம்முடன் மட்டுமல்ல யுகம் யுகமாய் நிற்குமய்யா எம் தமிழ் மண்ணில் நல்ல மனிதராய் எமைக்காத்தீர். நற்தமிழ் வாழும் வரை நீர் வாழ்வீர் வையகத்தில்.

காலனது வந்தாலும் உயிர்காக்க தமிழ்கொடேன் என்றீரே. நற்தமிழ் காக்க உம்முயிரை ஈர்ந்தீரோ இன்று.

உமது பிரிவால் துயருறும் அனைவருக்கும் ஆறுதல் அளிக்க வழியில்லாமல் துயருறும் எம் நிலைதான் என் செய்வோம்.

உம் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கும்.

சந்திரா ஜோன்ஸ்.
(லண்டன்)

---

## பெரியப்பாவுக்கு....

என்றோ ஒருநாள் மனிதன் இறப்பான் எனத் தெரிந்து; அன்றே, நீங்கள் நிலைத்து வாழ விதைத்த எழுத்து முத்துக்களிற்கு உங்களையே உரமாக்கி ஊக்குவித்துச் சென்றுவிட்டீர். எழுத்தாணி எடுத்து எமக்கு பிடிக்க கற்றுக் கொடுத்தீர்கள். எழிமையாய் வாழச் சொல்லித் தந்தீர்கள். அன்னைக்கு முன் பிறந்த அன்புத் தாய் வழியாய் பெரியப்பாவாய் நீங்கள் கிடைத்ததனால் பெருமையடை கின்றோம். ஆண்டவரின் சமூகத்தில் உங்கள் ஆத்மா சந்தோஷிக்க ஜெபிக்கின்றோம்.

**பெறாமக்கள்**
**ஆனந்தன், காய, கௌரி, அபிராமி**

## நீங்கள் ஒரு ஆலமரம்

நாணலின் கீதையில் ஆத்மாவின் உருக்கலை நாணலாய் வரைந்து உருகித் தந்தீர். தமிழே மூச்சாய் பேச்சாய் வாழ்வாய் வாழ்ந்தீர் இறுதிவரை. நாணல் ஆகி இருந்தால் வாழ்ந்திருப்பீர் பொன் மழையில். ஆலமரமாய் வாழ்ந்தீர். நலிந்தீர். நம் கண்ணீர் மழையில்.

இறுதிவரை தமிழ் மண்ணில் வாழ்ந்து மறைந்து விட்டீர் நம்பத்தான் முடியவில்லை மனம் நோகுது எமக்கு மார்பிலும் தோளிலும் சுமந்தீர் தாயாய், தந்தையாய், நேசம் பொழிந்தீர் பாவி காலனின் கண்ணில் நீர் ஏன் விழுந்தீர்.

எம் பிள்ளை உம்மடியில் தவழவில்லையே வாடுகிறதே அப்பா என் மனம். அறிவுடன், புகழுடன், துணிவுடன் வாழ வழிகாட்டி நின்றீர். சகோதரியின் கணவனாய் காணவில்லை நாம் உம்மை. தந்தையாய் நற் சகோதரனாய்த்தான் கண்டோம் நாம்.

உம் உடல் மறையலாம் புகழுடல் மறையாது என்றும் நம் நிலத்தில். உம்மை எரித்த தீயை தீமூட்ட துடிக்குது எம்கரம். உம்மைப் பறித்த காலனை காலமாக்கிட நினைக்குது எம்மனம். முகம் தெரியாத பெரியப்பாவை இனிப் பார்க்க முடியாத என கேட்கும் பிள்ளைக்கு என்ன சொல்வே எம் வார்த்தைகள் வருகுதில்லை எமக்கு – நின் தூய வாழ்க்கையைப் போற்றி மனதிற்குள் மலர் அஞ்சலிகள் செலுத்துகின்றோம்.

**மைத்துனிமார்.**
**பிரேமராணி. சந்திரா. தேவா.**

---

## எங்கள் சித்தப்பா

*சிறுவயதினிலே அப்பாவை இழந்த எங்களுக்கு சித்தப்பாவாகி - அப்பாவாகி ஆறுதல் தந்தீர்கள். இன்று அந்த அப்பாவையும் எங்களிடமிருந்து பறித்த எமனுக்கு எங்கள் ஆருந்துயரில் அழவைத்து பார்ப்பதில் என்ன ஆனந்தமோ?*

*எங்கள் அறிவுப் பசிக் கெல்லாம் இனிக்க இனிக்க அமுது படைத்து எங்களுக்குள் உறங்கிக் கிடந்த இலக்கியத் திறமைகளைத் தட்டி எழுப்பி எழுதுவதற்கும், படிப்பதற்கும் ஊக்கம் தந்த நீங்கள் இல்லாமல் திசை தெரியாமல் தவிக்கும் கப்பலானோமே இன்று.*

*உலக விடங்கள், நடப்புக்கள், பற்றி உங்களுக்கே உரித்தான பாணியில் அக்கு வேறு ஆணி வேறாக அலசி , ஆராய்ந்து எங்களுடன் விவாதிப்பீர்களே, எங்கள் சிந்தனைப் பாதைகள் விரிய வைத்து மகிழ்ந்த விவாத மேடைகள் வெறுமையாயினவே.*

*எங்களுக்கு அறிவு தெரிந்த காலம் தொட்டு என்றும் கலகலவெனப் பேசிச் சிரித்த முகத்துடன் தெரிந்த சித்தப்பா ஏன் இன்று மௌனமானீர்கள். இதைத் தாங்கும் சக்தி எங்கிடமில்லை.*

*எந்தக்கணமும் எங்களை அனைத்து முத்தமிட்டு புகழ்ந்து மகிழ்ந்த எங்கள் அப்பா இன்று எங்களை தனியாக தவிக்கவிட்டு மறைந்தாரே, இனி எங்கே காண்போம் எங்கள் ஒரே சித்தப்பாவை.*

**பெறாமக்கள்**
**மலர்விழி. மைதிலி. தர்ஷினி**

## அப்பாவுக்கு....

அன்பு காட்டி அரவணைத்து தோளில் சுமந்து என்னை வளர்த்த என் அன்புத் தெய்வமே! பள்ளிப் படிப்பைக் காரணமாய்ச் சொல்லி என்னைவிட்டு கொழும்பு சென்றீர்கள். என்னைப் பார்க்காமலேயே சென்று விட்டீர்கள். காலன் வந்து உங்களைக் காவிச் செல்லும்போது கடவுள்தான் என்னை நினைக்கவில்லை. நீங்களுமா சிறுவன் என்னைப் பற்றி சிந்திக்கவில்லை. ஆறவில்லை அப்பா என்மனது. உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன்.

மகன்
**இராஜகோபால் இராகுலன்.**

---

## இதயக் குமுறல்

பண்பின் உறைவிடமாய், பாசத்தின் பிறப்பிடமாய், உயர் புகழ் அடைந்து, ஒளிக்கதிராய் பிரகாசித்து, தமிழ் இலக்கியப் படைப்புகளை நாட்டுக்கு வெளிப்படுத்தி, தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்துக்காக உழைத்து அமரராகி நாட்டுப்பற்றாளன் என்ற விருதினைப் பெற்றீர்.

உங்கள் மறைவை எம்மால் நம்ப முடியவில்லை. எவ்வித குறைவுமின்றி நேற்று வரை இருந்த நீங்கள் தேறிவரும் வேளையில் எவரிடமும் சொல்லாமல் நேற்றிருந்தோர் இன்றில்லை என்று எம்மைவிட்டுப் பிரிந்ததேனோ. உங்கள் இழப்பை எம்மால் தாங்க முடியவில்லை.

விண்ணுலகம் சென்ற உங்கள் அன்பு அண்ணா தன்னோடு உங்களை அழைத்துப் போக வைகாசி (20-05-05) வந்தாரா!

சித்தப்பா சித்தப்பா என்று வாய் நிறையக் கூப்பிட்டு உங்கள் பின்னால் என் பிள்ளைகள் சுற்றி வருவார்களே இனி யாரைக் கூப்பிட்டு அப்படிப் பாசத்தைக் கொட்டுவார்கள்.

என் அன்பு மகள் தர்ஷினியின் திருமணத்துக்கு நீங்கள் புவனம் ராகுல் மூவரும் கொழும்புக்கு வந்து எங்களோடு 2 கிழமையாக ஆனந்தமாக இருந்து என் பிள்ளையை மனதார வாழ்த்தி விட்டுச் சென்றது இறுதியாக ஆகிவிட்டதே.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

என்றும் அன்புள்ள
**அண்ணி - இராஜகுமாரி கணேசப்பிள்ளை.**

# என் இனிய மாமா ... ராஜா மாமா

இனிமையானவர் என்ற சொல்லின் இலக்கணம், மாமா என்றால் மிகையாகாது. ஏனெனில் மாமாவின் இனிமையான முகத்தைத் தவிர வேறு எதனையும் எனது சிறுபிராயம் தொட்டு இற்றைவரை நான் கண்டது இல்லை.

மாமாவைப் பற்றிய எனது முதல் ஞாபகம் கிண்ணியாவின் கடற்கரைகளில்தான். அப்பா கிண்ணியாவில் வேலை செய்தபோது ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளும் அப்பா, நான், மாமா மூவரும் கடல் குளியலுக்குச் செல்வோம். கடற்கரை மணலில் மாமாவும் அப்பாவும் அப்படி என்னதான் பேசுவார்களோ அப்போது எனக்குப் புரியாது. ஆனால் அங்கே போகாதே இங்கே ஓடாதே என்ற அப்பாவின் அக்கறையான கண்டிப்பில் இருந்து விடுதலை வாங்கித் தந்து சுதந்திரமாகக் கடற்கரையில் ஓடி ஆட விடுபவர் மாமா என்பதை என்றும் மறக்க முடியாது.

கடற்குளியல் முடித்து வீடு திரும்பியதும் அம்மாவின் சமையலை ஒரு பிடிபிடிப்போம். அப்பா மௌனமாகச் சாப்பிடுவார். ஆனால் மாமா அப்படியில்லை. அம்மா இன்றைக்கு இறைச்சிப் பிரட்டல் சுப்பர் என்று இரசித்துச் சாப்பிடும் சாப்பாட்டுப்பிரியன். மாமாவின் பாராட்டுதலில் சமைப்பதற்காக கடற்குளிப்பிற்கு அம்மாவை விட்டுப் போன கோபம் கூட அம்மாவுக்கு மறைந்து விடும்.

பின்னர் அப்பா செட்டிக்குளத்தில் வேலை செய்த போது மாமாவும் செட்டிக்குளத்தில்தான் வேலை செய்தார். எனக்கு நன்கு ஞாபகமுள்ளது, செட்டிக்குளம் பாலர் பாடசாலையில் நான் படித்த காலம் பொழுதுபோக்கு ஏதுமற்று குவாட்டஸில் அம்மாவுக்கு ஆக்கினை குடுப்பேன்.

மாமா பாடசாலை விட்டு வந்து சாப்பிட்ட கையுடன் மாமாவுடன் கிளம்பி விடுவேன். போகும் வழியெங்கும் மாமா கதைப்பார்.... கதைப்பார். எதைப்பற்றி வழியிலுள்ள மாமரத்தைப்பற்றி ஆட்டைப்பற்றி. பூவைப்பற்றி. அதைவிடக் கூடுதலாக அப்பாவினதும் தனதும் பேராதனைப் பல்கலைக்கழக வாழ்க்கையின் இனிய அனுபவங்கள் பற்றி சுவைபட விபரிப்பதில் மாமாவை யாரும் மிஞ்சமுடியாது.

செட்டிக்குளத்தில் எனது மாமாவின் சாரம் எப்போதும் ஈரமாகத்தான் இருக்கும். காரணம் எனது குட்டித்தங்கை பிரியா சிறுநீர் கழிக்குமிடம் மாமாவின் மடியில் தான். எந்தவித அலுப்புச் சலுப்புமின்றி நாள் முழுவதும் பிரியாவை மடியில் தூக்கி வைத்திருப்பார்.

இங்க வாடி வாடி என்று மாமா எங்களைக் கூப்பிட்டு கதைப்பதே ஓர் அழகுதான். எங்கள் மீது ராஜா மாமா காட்டிய அன்பு அலாதியானது. ஈடுஇணையில்லாதது. எனது அப்பாவும் மாமாவும்

பால்ய கால நண்பர்கள் என்றலும் அடிக்கடி சண்டை போடுவார்கள். ஆனாலும் ஒரு போதும் கோபித்துக் கதைக்காது இருததை நாங்கள் கண்டதில்லை.

இன்று நான் சித்த மருத்துவராக இருக்கின்றேன் என்றால் அதற்கும் ஒரு காரணம் மாமாதான்.


சிறு வயது முதலான மருத்துவர் என்ற கனவு க.பொ.த உயர்தரப் பெறுபேறுகளின் அடிப்படையில் சிதைந்த போது, நீ டொக்டர் தானடி அதில் மாற்றமில்லை என்று எனக்கும் எனது அப்பாவுக்கும் நான் சித்த மருத்தவம் படிக்க ஊக்கமளித்தார்.

அப்படிப்பட்ட மாமாவின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டு விட்டு, வீட்டில் இருந்த போது எனது மூத்தமகன் யதுர்சன் மாமாவின் படத்தைப் பத்திரிகையில் பார்த்து விட்டு நீங்கள் ஏன் என்னையும் கூட்டிப் போகவில்லை. இவர் அம்மப்பாவுக்கு மட்டும் **Friend** இல்லை. எனக்கும் **Friend** தான் என்று கூறி அதிர்ச்சியடையச் செய்தான். எப்படி என்று வினாவிய போது நானும் அவரும் ஒவ்வொரு கிழமையும் பொது நூலகத்தில் சந்தித்து கதைக்கிறனாங்கள் என்றான்.

எட்டு வயது எனது மகனிற்கு மாமா **Friend.** இது தான் எங்கள் மாமா மாமாவைப் பற்றிய நினைவுகள் என்றும் இனிமையானவை. ஆனால் அவரது இழப்பு என்றும் எமக்கு பேரிழப்புத்தான்.

**என்றும் மாமாவின் அன்பு மருமகள்**
**திருமதி ரேணுகா பிரதீப்குமார்.**
**சித்த வைத்திய அதிகாரி**
**இலவச சித்தாயுள் வேத வைத்தியசாலை**
**யாழ்.மாநகரசபை.**

# நாணலின் கீதை



செம்பியன்
செல்வன்

## கலாநிதி க.கைலாசபதியின் “நாணலின் கீதை” முன்னுரையில் இருந்து



செம்பியன் செல்வன் பல்வேறு ஆக்க முயற்சிகளில் அவர் ஈடுபடுவா ரெனினும் சிறுகதை எழுத்தாளர் என்ற ஹோதாவிலேயே அவரைப் பலரும் அறிவர். ஏறத்தாழ இருபது வருடங்களாகச் சிறுகதைகள் எழுதி வருகிறார். அவரது சிறுகதைகளிலும் நடையின் தனித்துவத்தை அங்கங்கே காணக்கூடியதாய் இருக்கும். வசன கவிதை என்றோ, காவியப் பண்பு வாய்ந்த உரைச் சித்திரங்கள் என்றோ வர்ணிக்கத்தக்க சொல்லோவியங்க ளில் பொதுவாக சோக உணர்ச்சி இழையோடுவதையும் பல சந்தர்ப்பங் களில் நாம் காண்கிறோம்.

சோகம் என்பது அழுகை அன்று. பிரலாபமும் அன்று. உள்ளத் தின் குமைவு என்று கொள்ளலாம். புதுமைப் பித்தனின் கதைகளுக்கு முன்னுரை எழுதிய ரா.ஸ்ரீ.தேசிகன் “ஒரு கவியுள்ளம் - சோகத்தினால் சாம்பிய கவியுள்ளம்” என்று விவரித்தார். அத்தகைய சோக உணர்ச்சியின் சாயலை **நாணலின் கீதையில்** காணக்கூடியதாய் இருக்கிறது. அதுவே ஆன்ம ரீதியான தேடலுக்கும் அடிப்படையாய் அமைந்து விடுவது கண்கூடு.

இந்நூலில் இடம்பெற்றுள்ள சொற் சித்திரங்களை - வசன கீதங்களை- உற்று நோக்குமிடத்து, மனத்தடுமாற்றம், சர்ச்சைகள் இவற்றுக்கூடாகவும் இறையுண்மையை ஏற்றுக்கொள்வதால் ஆசிரியருக்கு நம்பிக்கை இழப்பு ஏற்படவில்லை என்றே தோன்றுகின்றது. வாழ்வில் நம்பிக்கை வரட்சி என்னும் விரக்தி நிலை இவற்றில் இல்லை. அதற்குக் காரணம் ஆசிரியர் விடிவிலும் விமோசனத்திலும் நம்பிக்கை இழக்காமையேயாகும். புறநிலைப்பட்ட யதார்த்தத்தை - துன்ப துயரங்களை - அகநிலைப்படுத்தி யிருக்கிறரே அன்றி வாழ்க்கை அர்த்தமற்றது என்றோ விவர்த்தமானது என்றோ வியாக்கியானஞ் செய்ய முற்படவில்லை.

ஆசிரியரது உலக அநுபவங்கள் உருமாற்றம் பெற்றிருப்பது ஒருபுற மிருக்க, அவற்றை இவ்வாறு ‘இறை விண்ணப்ப’ வடிவில் ஆசிரியர் அமைத்தற்கு முன்னுதாரணங்களாயும் வழிகாட்டிகளாயும் இருந்த இலக்கியப் படைப்புக்களும் இவ்விடத்தில் நினைவுகூர வேண்டியவை.

ஆசிரியரது முந்திய படைப்புகளையும் பரிணாமத்தையும் கவனித்து வந்தவர்களுக்கு இந்நூலில் உள்ளவை தருக்க ரீதியான வளர்ச்சிக்குட்படு பவனவாகவே தோன்றும். அவரது கல்விப் பின்னணி இதற்கு உதவியுள்ளது. உளவியல் நோக்கு, தேடுதல் விழைவு, நடைச்சிறப்பு நாட்டம் என்பன ஆசிரியரை எப்பொழுதும் கவர்ந்து வந்திருக்கின்றன. அவற்றின் ஈர்ப்பை இந் நூலிலும் காணலாம். அவற்றிலேயே ஆசிரியரது ஆளுமையும் புலப்படுகிறது. அவரது பரிசோதனையும் பயன்தருகிறது. நவீன ஈழத்துத் தமிழிலக்கியப் பிரவாகத்தில் இப்போக்கும் ஒன்றாகும்.

க.கை

# ஒரு கிளிஞ்சலின் கீதம்

**இறைவா,**

உன் ஆலயத்தின் மணிக்கதவங்கள் 'கணீ'ரெனச் சப்தித்துக்கொண்டு மலரின் இதழ்களென விரியத் திறக்கின்றன.

உன் திருக்கோலக் கருணை ஒளி மகரந்தமாய் மணம் பரப்ப, அதில் ஆழ்ந்து போகும் இதயங்கள்.

உன் சந்நதியே, உன் புகழ்பாடும் இசையரங்காகி விடுகின்றதே.
வலம்புரிச் சங்குகளின் வளமார்ந்த முழக்கங்களும்,
துளையிட்ட மூங்கில்களின் சுநாதன அலைகளும்,
தம்புராக்களின் சுருதி லயங்களும்,
நாதஸ்வரங்களின் நாதச் சுருள்களும்,
மத்தளத்தின் மதமதர்த்த அதிர்வுகளும்,

உன் செவியை நிறைக்கின்றன. உதட்டிலே குமிண் சிரிப்பை மலரவிடுகிறாய்.

ஆனால்,

என் குரலும், உன் திருக்கோயில் வாசல் நிறைத்து, உன் செவியை மஞ்சமாகித் தவழவேண்டும் என்ற அவாவிலே,

எம் மனம் மதுகரனின் இறகுகளின்
ரீங்காரமாய் துடிப்பது
உன் குழையணிந்த பூஞ்செவிகளில்
விழவில்லையா?....

**தேவா,**

ஆழ்கடலின் மௌனக் குகைகளில் கர்ப்பமாகி,
அழுக்கே,
உணவாகி, உடையாகி,
மௌடீகத்தின் முதல் உயிராய்
காலம் கழிந்த என்னுடலை
உப்பலையில்
தூய்மை செய்து,
அலைத் தோணி மேலேற்றி
(தோணியா, குப்பை வாரா?)
கடல் ஓரம்
மணல் நடுவில் -

(தேவனே, உன் கருணைதான் என்னே?
உணர்வற்ற உயிர்க் கூட்டிற்கும்
உள்நோ ஏற்படக்கூடா தன்றோ
மணற் படுக்கை அமைத்தாய்
மலர் மஞ்சம் விரித்தாய்?)
எனை ஏற்றிவிட்டாய்?

என் இனிய சோதரர்கள்,
மூத்தவர்கள்,
வலம்புரிச் சங்குகள்,
உன் முன்றலில்,
உன்னையே அபிநயித்து
ஓங்காரமாய்
முழக்கமிடுகின்றனர்.
உன்னைத் தம்பால் ஈர்த்துவிடத் துடிக்கின்றனர்.

ஆனால்,
நானோ!
கிளிஞ்சலாய்!
மணல் மீது கோலமிட்டு
பயனற்றுக் கிடக்கின்றேனே?
உன் முன்றலிலே என் கீதம் ஒலிக்காதா?
என் ஆவல் ஒலி
உன் காதில் விழவே விழாதா?
மகாப் பிரபோ,
நான் கடந்தேறுவது,
உன்னை அடைவது
எங்ஙனம்?
ஊண் நீக்கி,
உற்றார் நீக்கி
உயிர்க் கூட்டைச் சுமந்து,
கரை மணலில்
கோடைப் பகலின்
உச்சி வெயினின்றும்
எழும்
என் கீதம்,
ஒரு கிளிஞ்சலின் கீதம்
உன் கன்றின் கதறல்
உன் கரப் புல்லிற்காக
தவிக்கும், ஏங்கும்
என் இரங்கற் பா
உன் திருச்செவிகளில் விழவில்லையா?
விழுந்தும் உன் இரசனையை, ஈர்க்கவில்லையா?
கவனத்தின் கணப் பொறியை,
கவரவில்லையா?

**இசைவள்ளலே,**

நானறிவேன்,
என் இசை, பாடல், தாளம், ராகம் எல்லாமே....
குறைகள் நிறைந்தவை; குற்றங்கள் பொருந்தியவை.

ஆனால்,

நான் என் செய்வேன்?
என்னிடமுள்ளதைத்தானே நான்
உனக்கு
நிவேதனம் செய்ய முடியும்?
என்னிடம் இல்லாததை
எதிர்பார்க்கும் அளவிற்கு
நீ -
நானில்லையே....

முத்தோடு பவளத்தையும்,
சங்கொடு சிப்பியையும்
உன்னிடம் சேர்ப்போர்
என்னை ஏன் உன்னிடம்
அழைத்து வரவில்லை?
வர்ண, வர்ண நிறமிட்டு
வெண்ணுடலைக்
கலையாக்கி,
வெண்மணலில்
விலையின்றிக் கிடக்கும்
என் உடலை
என் கீதத்தை
ஏன் புறக்கணித்தார்?
புறக்கணித்தீர்?

**ஐயனே,**

இதுவென்ன சோதனை
வாழ்வே அநித்தியமா
அநித்தியத்தையும்
பயனற்றதையும்
படைத்ததால், உன்
பெருமை குன்றியதாகாதா?...

பச்சைக் கூட்டுடனே
பக்தர்களைச் சேர்ப்பவனே!
பச்சைகழற்றி,
கூடு மட்டுமாய்
உன் கீதமாய், சப்திக்கும்
என் ஆசை,
உன் பெருமை
உன்றனுக்கே எட்டவில்லையா?
எட்டியுதைத்தாயா?

அருள் பாலிப்பவனே,

என் கீதம் உன் செவியில்,
உன் தாளில்படியவில்லை என்றால்
மீண்டும்,
என்னை ஆழ் கடலில் சேர்த்துவிடு
இல்லாவிட்டால்,
உன் தாளில் கலக்கவிடு,
இது ஒன்றினையாவது என் கீதத்திற்காகச்
செயலாக்கிவிடு.

என் ஆசைகளே.... என் ஏக்கங்களே... பெருமூச்சுக்களே.....
உன் புகழ்... ஞானப்பெருமை... அருட்கொடைகள்...
தேவனே....!

கரை சேர்த்த படகோட்டி,
ஆழ் கடல் சேர்க்கத் தயங்குகின்றானே?....
வந்த வழி செல்ல முடியாது என்ற தத்துவமா?...
தத்துவமும், நீயும்... சித்து விளையாடுகின்றீர்கள்.

நானோ?....

இப்படியே,
வெண் நிறப்பரப்பின்
சுடு மணலில்,
ஈரப் புதரில்,
பாலை வெளியில்,
காத்தே கலங்கவேண்டுமா?...

என் அழகு,
என் கீதம்,
உன் விழிக்கு,
உன் செவிக்கு
இதமே இல்லையா?....
உனக்கு வரியோடிய சங்கா வேண்டும்?
தாரை தப்பட்டைகளா வேண்டும்...?
சப்திக்கும் நாதசுரங்களா வேண்டும்...?
ஐயனே!...
இதுவென்ன சோதனை?...
ஏழை, வலியற்றோன்
என்னிடம் இவையெல்லாம் எது?

ஆ!.... யனே.... நீயா?....
உன் குஞ்சித பாத கமலங்கள் என் கீதத்திற்குப் பின்னிசையாக,
உன் வரவுக்குக் கட்டியம் கூறகின்றனவா?
உன் வரவுக்காக என்னுள் என்ன ஆயத்தங்கள் அரங்கேறின.
அரங்கமே காலியாக,

ஆசைகளே அந்தரங்கத்தில் ஆர்ப்பாட்டமிட்டால்....?
நீ திரும்பி விடுவாயோ?
வழி நின்று தடுக்கவும் சக்தியற்றுத் தவிப்போடு,
நிலை குலைந்து, பொறிகலங்க....
நீ வாய் மகரந்தம் சிந்துகிறாய்.

"என்ன இது' கோயிலுக்குத்தான் வருகிறீர்கள் என நினைக்க, வழியில் இங்கேயே தங்கிவிட்டீர்களே?" "ஆமாம், அவன் என்னுள்ளே இருக்கும் போது அங்கு சென்று யாரைத் தரிசிப்பது? அவனே அங்கும், இங்கும் எங்கும்...."

"புரியவில்லையே?.... என்ன சொல்கிறீர்கள்?"
'அவனை மனதினால் நெருங்கினால் அண்மையில் நிற்கிறான்.... மனக் கோயிலும் அவனே.... அதிலிருப்பவனும் அவனே'. அவனுள் அவனைக்காண' இந்த ஏகாந்தப் பெருவெளிதான் ஏற்றது. மானசீக உணர்வில் அவன் பாத தூளிகையில் சிரசைச் சாய்க்கவும், கோயிலின் மங்களகரமான புனித ஒலிகள் என் செவிகளில் பூச்சொரியும்.... நான் ஒவ்வொன்றாகக் கற்பனை செய்து கொள்வேன்.... என் ஆத்மார்த்த ஒன்றிப்புடன் இறையுடன் கலந்து அதன் கலையழகுடன், கருணையுடன் இலயித்து விடுவேன்....

கண்ணால் காண்பதனை விட, கற்பனையில் அறிவின் துணையுடன் அவன் அழகை, அற்புதத்தை ரசிப்பதற்கு அவனிலிருந்து மனவெளியை அகலப்படுத்துவது சிறந்தது.... சூரிய ஒளியை எட்ட இருந்து பார்த்தால்.... எத்தனை அழகு.... வண்ணம்.... மலர் விரிப்பு" - குரலில் தெய்வம் இறங்குகிறது. கனிகிறது. சிரிக்கிறது.
நெஞ்சம் குளுமை காண்கிறது.

**தேவனே....!**
உன் திருவுள்ளக் கருத்தை எப்படி எப்படியெல்லாம் புலப்படுத்துகிறாய். அதனை அறியாத நாம்.... புலம்பியும் தவித்தும்.... ஏங்கியும்.... உருகியும்.... திருப்தியழிந்தும்.... விரக்தியுற்றும்....
டாண்!.... டாண்....! டாண்....!
- மணியோசை வெற்றியின் கீதமாய், போதனைச் சிதறலாய் மீண்டும் ஒலிக்கிறது.

# முள்ளும் மலரும்

**ஞான தேவனே,**

உன் அருட் கருணை மழையிலே என் இதயத் தோட்டம் குளுமை காண்கிறது. கனிந்து சிலிர்க்கிறது. சிலிப்பின் மதமதர்ப்பில் தாய்மையின் பரவசம் உள்ளெல்லாம் ஊடுருவிச் சுரங்களாகி அதிர்கின்றன. அந்த இன்பராகச் சுரங்கள் எண்ணற்ற மலர்களைப் புஷ்பிக்கின்றன.

புஷ்பங்கள் காற்றில் அலையாகி, மகரந்தப் பொடிதூவி, தோட்டத் தைச் சிம்மாசனம் ஏற்றுகின்றன. இவையாவும் எனது முயற்சிகளே.... செயல்களே.... விளைச்சல்களே என ஆங்காரத்தில் நான் சொற்ப விநாடி இறுமாந்து நின்றபோது....

என் இதய மலர்கள் அனைத்தும் உனக்கே உனக்குச் சொந்தமான தென்ற நினைப்பின்றி, எனதே எனது - என் இதயமே நிலையானது என்ற இறுமாப்பில் உடையவன் நீ இருக்க, எனக்கே சொந்தமானதென்ற பண்ணையாரின் நகைப்பிற்குரிய அறியாமையினால் ஒரு கணம் சொந்தம் கொண்டாட என் மனம் அவாவியபோது....

பருவம் மாறி
வெப்பம் மிகுந்து
இலைகள் உதிர்ந்து
செடிகள் குச்சிகளாய்
கரிக் கோடுகளாய்
மலர்கள் சருகாய்
மகரந்தம் தூசாய்
பற்றைப் புதரின்
கோரை அரிவாள்
புல் நாக்குகளாய்

என் இதயக் கரணை வெடிப்புகளில் கரு நிழலாய் பயம் காட்டி நின்ற வேளையிலே....

வரண்டு, பாளம், பாளமாக வெடித்த உதடுகளின் அவிந்த நாக்குகளின் காவி படிந்த பற்களில் மஞ்சட் சிரிப்பும் மறைந்த அந்தியிலே....

**முதலே**

இதயம் உன்னதே, அதன் இயல்பு உன்னதா? என்னதை உன்னதாக்க முயன்றபோதும் என்னது என்ற பற்றை நீக்கிலேனே?....

இதய மண்ணை உழுது, பதமாக்கி, உரமிட்ட உனக்காக மலர்த்திய தோட்டத்தில்,

புஷ்பங்கள் மலர்ந்த ஒரு கணத்தில்,

தோட்டத்தின் விளைச்சலில் ஒரு கணம் மயங்கித் தடுமாறினேன். அந்தத் தடுமாற்றம்

என் தோட்டத்தையே குலைத்து விட்டதே!

**இறையே**

என்னை மன்னித்து விடு! இனி உனக்காக. நானாகிய உன்னைக் கொண்டு பூத்துக் குலுங்கும் பூஞ்சோலைகளை அமைப்பேன். நான் உன்னிடம் மன்னிப்பைப் பெறுவேன்.

எனது புத்தம் புதிய தோட்டத்திலே நவ நவமான புது யுகப் பூக்கள் மலரும். அவை புதுப் பொலிவும், புத்தழகும், புதுவண்ணமும் கொண்டு உன் வீரம் செறி மார்பில் உன்புகழ் பரப்பும் மணிகளென ஒளிர நான் தொடுப்பேன் மலர்ச்சரங்கள்.

என் கரங்கள்.... மனம் எல்லாமே தோட்டத்தைச் சீர்படுத்துவதில் ஈடுபடுகின்றன.

இறையே! என் கரங்களுக்கு ஆற்றலைக்கொடு.... மனதிற்கு ஆனந்தத் தேனைக்கொடு.

நீ கொடுப்பவற்றிலிருந்தே, எதையும் நான் தர முடியும்.

நீ தந்ததையே திருப்பித் தந்து நான் புதுப்பெயர் எடுக்கிறேன். அது-

பக்தன்.

பெற்ற கடனைத் திருப்பி அளிப்பவனுக்கு வள்ளல் எனும் புதுப்பெயரை வழங்க நீ ஆடும் - விளையாட்டு,

இந்த விந்தைகள் உன் விடயங்களில் மட்டும் தான்.

என் தோட்டத்திற்றான் எத்தனை செடிகள்.... விதைகள்.... பதியன்கள்..

எல்லாமே தளிரிட்டுச் செடியாகி, பூ மலரும் காலங்களை... பருவங்களை... வசந்தங்களை... சாதகப்பக்ஷி என எதிர்பார்த்து எதிர்பார்த்துக் காத்திருந்தேன்.

வசந்தம் நல்வரவு கூற, பருவம் செடிகளிலே குடியேற,

**நான் ஆவலுடன் விழித்திருந்தேன்.**

ஆ! என்ன ஏமாற்றம்... வேதனை... நெஞ்சங்களில்.... மலர்களில்... இதழ்களுக்குப் பதிலாக முட்களே மலர்ந்தனவா?.

*என் செடிகள் புஷ்பிக்கவேயில்லை.*

*பருவம் வந்தும் மலராத பெதும்பைகளா அவை?*

*இறையே இதுவென்ன கூத்து?*

*என் தோட்டத்தின் எல்லைகளிலே, நெருஞ்சிக் கூட்டங்களும், குருக்கத்திகளும் நிறைந்து சிரித்து மலர்ந்திருக்கின்றனவே?...*

*உன் அலகிலா விளையாட்டு போர்வை என என்னைக் கவிந்து திக்குமுக்காடச் செய்கின்றன.*

*உனது குமிழ்ச் சிரிப்பின் அர்த்தம் புரியாமல் நான் மயங்கி விழுகின்றேன்.*

**தத்துவத்தின் தரிசனனே!**

*நான் விதைத்த வித்துக்கள் எப்படி இனம் மாறின?*

*நாளும் பொழுதும் - கண்ணின் மணிகள் என இமை மூடாது காத்திருந்து போஷித்தவைகள், வளம் பெறாது போக-*

*கவனிக்காதவைகளும் வேண்டாதவைகளும், வேரோடி நிலம் பிளந்து மனதின் இறுமாப்பு எனப் போஷித்துப் புஷ்ப்பித்தன?*

**தேவனே!** *இது உன் போதனையா? விளையாட்டா?*

*உன் பாத கமலங்களைச் சூட்ட எனக்குக் கிடைத்தவை இம் முட்செடி மலர்களா? இச் சின்னஞ்சிறிய... மணமற்ற அழகற்ற மலர்களும் உனக்கு உவப்பா?....*

**ஐயனே!....** *உன்னை நான் புரிந்து கொள்வது எங்ஙனம்*

*ஆ! தேவனின் தேவனே!... என் தவறைப் புரிந்துகொண்டேன். தோட்டத்தை அமைக்கும் வேளையில்... நான் என்ற ஆணவத்தையே நான் உரமாக இட்டிருந்தேன். ஆணவங்கள் முட்களானதில் ஆச்சரியமேயில்லைத்தான். உன் போதனைகள் மணிகளின் சுடரெனப் பல கிளை விட்டுப் படர்வதை உணர்கின்றேன். ஆனாலும்....*

*நந்தவனத்தில் இவை மலர்வதென்றால்,*
*நந்தவனமே பழுதாமோ?*
*இறைவா!...*
*தோட்டமும் உனதே!*
*வித்தும் உன்னதே!*
*விளைச்சலும் உன்னதே*
*இதில் நானும் என்னதும் எதுவுமேயில்லை*
*உன் தோட்டத்தில் விளைவும்,*

விளைச்சலும்,
வித்தும்
பயனும்
எல்லாமே- நீதான்
அனைத்தையும் தரவேண்டியவன் நீயே யன்றோ?
நீயே- விதை!
நீயே- அறுவடை செய்!
நான் - நானாகிய நீயேயல்லவோ?


**காலதேவனே!**

குருக்கத்திகளும், நெருஞ்சிகளும் மலர்ந்த முள் மனக்காட்டில்...
மா, முல்லை, அசோகு, அரவிந்தம், நீலோத்பலம் முதலான பஞ்சமலர்க் கூட்டங்களும், ரோஜாச் செடிகளும், மல்லிகைப் புதர்களும், எப்படி எழுந்தன? எப்படி மலர்ந்தன?

முள் மனக்காட்டில் சுனையூறி நீர்ப்பூக்கள் கொலுச் சிறந்த வகை தான் என்னே?....

**இறையே!**

என் மனக்காடு என்னும், உன் விளை நிலத்தில் இவையேயல்லாது வேறென்ன மலரும்? ★



# துடுப்பில்லாத படகு

**ரூபனே, அரூபனே, தேவனே, காலத்தைக் கணங்களைக் கடந்த முதல்வனே!**

நீ எங்கிருக்கிறாய்? நீ இருக்கின்றாயோ, இல்லையோ? என்ற தேடுதல்கள்.

விசாரணையாக, விவாதமாக, குதர்க்கமாக, தத்துவ தரிசனமாக,

புவியின் முதற்பூண்டு உற்பவித்த நாள் முதலாய் ஓய்வற்ற, செயலின் தொடர்ச்சியாக,

நித்தம், நித்தம் நிகழ்ந்துகொண்டிருக்கும் வேளையிலே- நான்,

உன்னை - உன் இருப்பிடத்தைத் தேடித் தேடி அலைந்து இளைக்கிறேன். நீ என்ன சித்து விளையாட்டுக்காரனா?

நீ ஏன் மறைந்து, மறைந்து இல்லாதவனாகின்றாய்? என் மனதில் நீயே சிந்தனைக் குமிழிகளை ஊதி விடுகின்றாய்.

ஒரு கணம் வெளிச்சம் தொடர்ந்து - காரிருள்,

இருளின் பின்னணியில், கணநேர வெளிச்சம் சிந்தனைப் பொறியைப் பற்றவிடுகிறது.

என் தேடுதலில் நீ கிட்டவில்லை என்றால் -

நீ இல்லை என்பதனை விட...

என் செயலில் போதிய ஊக்கமில்லை. திறனில்லை. ஈடுபாடு இல்லை என்றே பொருள் கொள்ளலாமா?

உன்னைக் கண்டு, உன் பொருளை விண்டு விண்டு உலகோர் வியக்க,

நான் முந்தவேண்டுமென்ற அவா என்னுள் அலைகின்றது.

அவா- ஆசையா? உன்னில் கொள்ளும் ஆசையும் பற்றா....? பாசமா?

அப்படியாயின்..... பற்றைத் துறந்து, பதியே உன்னை அடைவது எப்படி?

பற்றிருந்தால் தானே சிக்கனப்பற்றி உன்னைத் தொடரலாம்? நீ...

எங்கெல்லாம் இருக்கிறாய், என முன்வந்தவர்களின் தேடுதலில் கிடைத்த வழிகளில்... இடங்களில்... எல்லாம் நானலைந்தேன்.

நீ - மலர்க்காட்டில் இருப்பதாகச் சொன்னார்கள். பாதை சுலபம்; சௌந்தரியக் காட்டில் உன்னைத் தேடுவதும் இன்பமான விளையாட்டு;

பொழுதுபோக்கு என்ற நினைப்புடன் ஓடோடி வந்தேன்.

என் நினைப்பின் வெம்மையைத் தாங்கமாட்டாது மலர்கள் வாடி உதிர, நீ வேறிடம் தேடிச் சென்றுவிட்டாய்.

நீ.... வசந்தகாலச் சோலையிலே, வெண்ணிலா வேம்பின் இடை நடுவிலே, குயிலின் கானமாக நிற்பதாகச் சொன்னார்கள்.

கானங்களின் மையத்தில் உன்னைப் பிடித்துவிடுவேன். உன் கானத்தைக் கேட்கும் முதல் மனிதன் நானாக இருப்பேன் என,

(உன்னை அடைகின்ற ஆவலும், அது உலகின் முதன்மையாக இருக்க வேண்டும் என்ற ஆவலும் இரட்டைக் குழவிகளென, ஒரு கொப்பூளில் மிதக்கின்றனவே? இறைவா, - இது சோதனையா, உன் சாதனையா)

துடிக்கும் உள்ளத்துடன் பறந்து வந்தேன் -

அங்கோ - குயில்களின் சிறகுகள் உதிர்ந்திருக்கக் கண்டேன்.

நீ - எங்கோ மோன வெளியில் தபசில் இருப்பதாகச் சொன்னார்கள். தயங்காமல் சென்றேன்.

தபசிருந்த புலித்தோல் என்னைப் பயங்காட்டிற்று.

இறையே இதுவென்ன விளையாட்டு? நீ என்ன எண்ணுகிறாய்...? என் தேடியலையும் செயல்களைப் பித்தலாட்டம் என்கிறாயா?....

நீ- நீலநதிக்கரையின் ஓரத்தே, பொற்கோயிலில் குடிகொண்டு- தரிசன விளக்கம் தருவதாக - ஞானகானம் இசைப்பதாக- யாரோ கூறுகிறார்கள்.

**மூலனே -**

பூமாவின் பாசச் சுரப்பான, அங்க சௌந்தரியமென எங்கெல்லாமோ பாயும் நதிகளிலே -

உன் நதிக்கரையை எங்ஙனம் தேடுவேன்?

ஏது நதி? எந்த நதி? எதுவுமே புரியவில்லை.

ஒவ்வொரு நதியாக ஓடினேன். ஆங்கார ரோசத்துடன் அலைகள் குமுறிப் பாய்ந்து, புரண்டோடும், பாறைகளைப் புரட்டி ஓடும் ஓசைகளே என் காதை நிறைத்தன.

உன் திருவாயின் அமுதவாக்கு என்னை அழைக்கவில்லையே?

அலைகளின் அர்த்தமற்ற ஆரவாரிப்பும், என் மனத் தவிப்பும்
**ஞானதேவனே!**

'நதி வழியே போ! பாதை கிட்டும்! பயணம் வெற்றி பெறும்' - என்றார்கள்.

நதிகள் இருந்தன. நீர் நிறைந்திருந்தன.... ஆனால்.... உன்னை அடையும் படகுகள்?.... படகுகளற்ற நதிகள்.... துடுப்புகளற்ற படகுகள்.... பாறைகள் நிறைந்த நதிகள்.... முதலைகள் நிறைந்த நதிகள்.... சுழல்கள்.... பழுதடைந்த படகுகள்.... மரணச்சுழிப் படுக்கைகள்....

**இறைவா!**

நதிகள் பயங்கரமானவை என்று எண்ணுகையில்.... நதிப் படுக்கைகளுமல்லவா பயங்கரம் காட்டுகின்றன.

இது விளையாட்டா.... அக்கினிப் பரீட்சையா.... (நீர்ப் பரீட்சையா)

என் செயல்கள் யாவை? நீ என்ன சொல்கிறாய்? இவற்றின் வாயிலாக? நான் உணரமாட்டாதவன்.... உணரவைக்க வேண்டியவன் நீ....

ஞானாசிரினும்.... மூடச்சீடனும்,

**ஆபத்பாந்தவனே!**

இதோ ஒரு படகு அலைகளில் ஆடி அசைந்து.... ஹம்சத்தின் ஒல்கி ஒசிந்த நடையன....

பாய்ந்தோடுகிறேன்.... ஓட்டைப் படகு.

ஓட்டைப் படகும், என் பயணமும்.

என் பயணம் - என் மரணமாகட்டும். அல்லது உன் தரிசனமாகட்டும். படகுகளின் ஓட்டை வழியாக நீர் கொப்பளித்துப் புகுகின்றது. துடுப்புகள் யானையின் செவிகளென அசைகின்றன.... சில விநாடிகளில் வாடிய வாழையிலைகளாகி விடுகின்றன.... பேரலைகள் கரும்பூதத்தின் கொடுமை காட்டி, சுருள் நாகங்களாகத் தீண்டுகின்றன.... நாகம்.... ராஜநாகம்... பட நாகம்..... கருநாகம்.

என் கரங்கள் ஒருகணம் பயத்தில் தடுமாறுகின்றன. துடுப்புக்கள் என் கைகளிலிருந்து பிடுங்கப்பட்டு நீரிலே படகாகி, கரை ஏற்றுண்டு போக.

துடுப்பற்ற படகும் நானுமாக, உன் தரிசன ஆவலில் பயணமாகிறோம். படகை வலித்துச் செல்வது எது? அலைகளா? நீயா?... உன்னில் என் மனலயிப்பு ஒன்றிவிடுகையில்,

பயத்தின் நிழலே தீண்டவில்லை. மனம் என்னிடமிருந்தால் தானே நான் பயப்பட முடியும்?

என் உடலில் நீ பிரவேசிப்பதை.... என் நாவில் நீ தவழ்வதை, என் மனத்தில் நீ உறைவதை....

நான் அணுஅணுவாக ரசித்துக்கொண்டே, பேரானந்த லயத்தில் மூழ்கி, உன்னையே தியானிக்கத் தியானிக்க.... உன் கானம் என் செவிகளிலே மெல்ல.... மெல்ல.... அலைச் சுருளாய்ப் புகுந்து, என்புருக்கி மனமுருக்கி...

என் மனதில் இறுமாப்பு...

இதோ.... தெய்வகானம்.... மோனராகம்... ஓய்வற்ற கானம்.... இன்னும் சில கணநேரங்களில்.... உன் தரிசனம்... உன் தரிசனம்.... உன் பொற்கோயில்...

உன்னைக் கண்டவன் முதன் முதலில்.. நான்... கேட்டவன்... நான் சொல்லப் போகிறவனும் நான்...

என் தற்பெருமை - பெருமை கொள்பவனையே ஒரு கணம் மறக்கச் செய்கிறது.

'படீர்!' - பெரும் அலை படகைத் தாக்குகின்றது. வெள்ளம்... மரணச் சுழி... நாசிமுட்டும் உப்பு நீர்

என்னை யாரோ... எதுவோ... எங்கோ... இழுத்துச் செல்லும் வேதனை..

ஆ!.... சமுத்திரம்... ஆழிவாய்ப் பெருங்கடல்...

**இறைவா!....** கணநேரத் தவறுக்கு இத்தனை பெரிய தண்டனையா? சோதனைகள்.... சோதனைகள்.... சோதனைகள்....

போதுமையா... போதும்... நான் வலியற்றவன்... தாங்க மாட்டாதவன்... திணறல்களில் முக்குளித்து... மூச்சுத் திணறலில்... மூளை முடிச்சிலே... மின்னொளித் தெறிப்பென 'பட்'டெனக் கிளை பிரிந்து.. அதிர்ச்சி அலைகளில் வர்ணங்கள் கோடுகோடாக... பச்சை ... மஞ்சள், நீலம் , சிவப்பு, ஊதா... செம்மஞ்சள் வெள்ளை.... நிறங்கள் தனித்துத் தவிக்கின் றன.... அணுக்களின் சேர்க்கையென இணைய இணைய பேரொளியாய் பிரகாசமாய் பேரண்டமாய் விகசிக்கத் தொடங்குகின்றன...

எதுவோ... என்னமோ மனதில்..
பாசி ஒதுங்கிய தடாக நீரென
பசி நீங்கிய மனித முகமென
களை அகன்ற பயிரென
இருள் கலைந்த விடியலென
உன் தரிசனம், மோனத்தில் பதிகிறது

என்ன ஆச்சரியம்!... நதி என்னை முக்குளித்து மேலெழுப்ப... கவிழ்ந்த படகு.... கட்டுமரமாகி நதியின் சங்கமப் பகுதியில்... தகத்தாயமாக உன் கோயில் மின்ன, புன்னகை ஆலய வாயிலின் வழியாக ஒளிர்வது தெரிகிறது.

**தேவனே!**

அந்தப் புன்னகையே என் வெற்றிப் பொருள் தான். அந்தப் புன்னகையே, எனக்குப் போதும். மனம் வசந்த காலப் புள்ளெனப் பாடுகிறது.

# வலைக்கண்ணிகள்

**தேவனே!**

ஒளிக்கதிர்கள் என்னும் கால்களை ஒவ்வொரு அணுவிலும் ஊன்றி நீ செறிந்து நிறைந்திருப்பதாகச் சொல்கிறார்கள்.

ஆனால்:

நானோ, ஒளியையோ, அதன் கதிர்களையோ, கண்டிலேனே!

சொன்னவர்கள் பொய்யர்களா?... நீயே பொய்தானோ?....

உன் விளையாட்டுக்கள் அதிகரித்து விட்டால்... என்னை அயர்வு சூழ்ந்துவிட்டால்... உன்னைப் பொய்யென்று தூற்றவே உற்சாகம் கொண்டுவிடுவேன்.

ஆமாம் நீ -
ஒளியா?...
ஒலியா?...
பரப்பா?
வெளியா?...

எது நீ?... எங்கே இருக்கிறாய்?....

நீரிலா?...
நிலத்திலா?....
வான வெளியிலா?...
சூன்யத்திலா?...

ஒன்றின் பின்னால், அடுதடுத்து வரும் எண்ணிறைந்த பூஜ்யங்களிலா?... அல்லது.... ஒன்றேயல்லாது வரும் பூஜ்யங்களிலா!...

எதில்... எது... எப்படி நீ இருக்கிறாய்!.... எங்கே இருக்கிறாய்!

உன் இருப்பிடம் எது?

உன்னை எங்கெல்லாமோ தேடித்தேடி இளைத்தது தான் மிச்சமா?...
அந்த மிச்சமான மிச்சம்தான் நீயா
இளைப்பு, மானிடத்தின் இளைப்பு.
உனக்கு பிடிக்குமோ? அதனாற்தான்-
உன் விளையாட்டுக்கள்
உனக்குப் பெரும் பொறுப்பாக இருக்கின்றனவா!
உலகத்தோர் விளையாட்டு உடலுக்கு உரமூட்டும்.
உன்னுடைய திருவிளையாட்டோ,
மனதிற்கு உரமூட்டுகிறதா!

**இறையே!**

நீ வழங்கும் ஏமாற்றங்கள் எனக்கு உரமாகின்றன.
என் உடலும் நலிகின்றது. உள்ளம் வைரமாகின்றது.
வைராக்கிய, அத்திவார மனமாகின்றது.
என் வைரத்தைக் கண்டு நான் இறுமாப்புக் கொள்கின்ற வேளைகளிலே,
நீ சிரிக்கின்றாய். எள்ளி நகையாடுகிறாய்!
நீயே இல்லாமல் நினது சிரிப்பு, என் செவியை குளிர்விக்கிறது.
நீ சிந்திய பாற்சோற்றின் அவல்கள்,
என் மனப் பசியின் உணவாகின்றன.
அதனால் வைராக்கியம் இறுகுகின்றது.
என் வைராக்கியமே உன்னைப் பெறுவதல்லவா?
நானோ உன்னைப் பிடிக்கத் துடிக்கிறேன்.
நீயோ, என்னைப் பிடிக்கத் துடிக்கிறாய்.
ஆனால், இருவரையும் சந்திக்க வொட்டாமல் தடுப்பது எது?

விளையாட்டுப்
போட்டியில்,
'சடுகுடு' விளையாட்டில்
பிடிபடப்போவது
நீயா, நானா!....

போட்டிதான்,
தோற்றவனே வெற்றியாளனின் மகிழ்வில்.
மெய்மறக்கும்
பரிசு இதல்லவா!
இந்தப் பரிசினைப் பெற என்னென்னவெல்லாமோ செய்து பார்த்தேன்.
என் முயற்சிகள்-

குறைகள் நிறைந்தவை.
புனிதம் குறைந்தவை.
தோல்விகள், தோல்விகள், தோல்விகள்,
தோல்விகள் எனக்குத் தயக்கத்தை தரவில்லையே,
மாறாக,
உற்சாகத்தையல்லவா, அளிக்கின்றன;
தோல்வியில் கரையும் மனமும்
உன் நினைவில்
வெற்றியின் படியாகி
இறுகுகின்றனவே.
நானறிவேன்,

என் முயற்சிகள் எவ்வளவு வேடிக்கையானவை. பலவீனமானவை, அர்த்தமற்றவை.

**காலங்களின் காரணனே!....**

உன்னை என் மனவலையில் அகப்படுத்த, நினைவுத்தோணியில், உன் நாம ஸ்மரிப்புத் துடுப்பெடுத்து, மனவலையை அகலவிரித்து, விரித்துக் காத்திருந்தேன்.

நள்ளிரவின் நம்பிக்கைப் பூக்களாக என்னுடன் கண்விழித்துத் துணையிருந்த நட்சத்திரப் பொட்டுக்களும் மறைந்தவிட்டன.

காலப்பொறிகள் கருகிவிட்டன.

காலங்கள் கடந்ததை நானோ அறியேன்.

மனவலையின் மிதப்புக் கோர்வையில் பிணைத்திருந்த என் விழிப்பொட்டுக்கள், சலனமற்று, இமைக்கவும் பயந்து அமைதியுற்றிருக் கின்றன.

காலங்கள் கல்பகோடிகளா? கணநேரவார்ப்புக்களா? நானறியேன்.

எதுவோ, ஏதோ,
என் வலையில் தட்டியது,
எனக்கு - எக்களிப்பு; இறுமாப்பு; தோள் பூரிப்பு.
"அகப்பட்டு விட்டாய்!" என்ற ஆரவாரிப்பு.
வேகம், வேகமாக,
என் மனவலைகளை இழுத்து இழுத்த ஒன்று சேர்க்க முயலுகிறேன்.

என் கரங்கள் சோர்வுறுகின்றன. தோல் உரிகின்றன. நடுங்குகின்றன. வலைகள் இரத்தக் களரியில் தோய்ந்து தோய்ந்து சோருகின்றன.

என்ன ஆச்சரியம்.

மனவலைகள் பாரக்குண்டுகள் கழன்றதென, ஏதுமற்றவைகளாகி,

காற்றில் மேலேறி, நீர் மட்டத்தின் விழிம்பேறுகின்றன. என் ஆவல் அடங்கவில்லை.

வலையின் மறுகரையைப் பற்றி மேலிழுக்கிறேன்.

ஏமாற்றம், ஏமாற்றம், இம்மறையும் வென்றவன் நீயே.

வலைக்கண்ணிகள் எல்லாம் அறுந்து, வாய்பிளந்து.... அவற்றில் வலைக்கண்ணிகள் ஒன்றிரண்டில்....

கடற்தாளைகள், பாசிகள்.... மட்டும் பச்சையாக மின்னுகின்றன.
எங்கிருந்தோ யாரோ கடற்காற்றில் கூவுகிறார்கள்.

'வலையில் 'அது' விழவேண்டுமென்றால் - வலையின் நாற்றம் போகவேண்டும்; அதற்காக வலைகளைப் பட்டைபோட்டு கொதி நீரில் அவிக்கவேண்டும்.'

ஆமாம் என் மனவலைக்கண்ணிகள் அவன் தணலில் வேகத்தான் வேண்டும். அதற்கு -

அடுப்போது?
நெருப்பேது?
விறகேது? எல்லாமே
நீதானே?

# முட்கள் ஓடியும் ஓசைகள்

**கடந்தவனே!**

உன்னைத் தேடுவதிலேயே என் காலங்கள் கழிந்து விட்டன. உன்னைத் தேடிப் பெறுவதா? நீ நாடி அடைவதா?

நான் ஈதொன்றையும் அறியேன். வகை பிரிக்கவும் தெரிந்திலேன். எது, எப்படி - இருந்தாலும்,

உன்னை அடைவதே - உன் தரிசனம் பெறுவதே என் இலக்காயிற்று. ஆயினும்,

என் இலக்குகள் தவறிக் கொண்டேயிருக்கின்றன.

தவறிய இலக்குகள் எதை எதையோ காயப்படுத்தி.... என் நெஞ்சம் இரத்தக் களரியாகின்றது.

இரத்தம் சொட்டும் நெஞ்சுடன், நீ எங்கெல்லாம் இருப்பதாகக் கூறினார்களோ அங்கெல்லாம் ஓடோடிச் சென்றேன். உன் நினைப்பின் வேகத்தில் - என் பயணம். பாதை இரண்டினதும் தொல்லைகள்.... சுமைகள்.... இழப்புகள்.... எதுவுமே தெரியவில்லை.

ஆனால் என் உடல் நலம் -

ஆத்மச் சிறகுகளை உதிர்த்த சகோரப்பட்சியாய்,

வீர நகங்களை இழந்த வரிப்புலியாய்,

தந்தம் இழந்த வாரணமாய், துடி துடித்தபோதும்,

உன் நிழல் தேடி அடைக்கலம் நாடி ஓடிய பதைபதைப்பில் - என் உள்ளம்,

வாடைக்காற்றின் பசுந்தளிராய் நடுக்கமுறுகின்றது.

உன் தரிசனம் காணா நிலையில் வாடலாயிற்று.

இலை பழுத்துச் சருகாகலாம். அது உதிரும் ஓசையாவது உன் திருச் செவியில் கேட்கலாகும். ஆனால்,

தளிர்வாடி உதிர்ந்தால்.... ஓசைகூட எழாதே....

தளிரிதயம் வதங்கி உதிருமுன் உன் தரிசன இலட்சிய தாகத்தில் தவிக கின்றது. அதனால் - உன்னைத் தேடும் வேட்கை - காட்டுத்தீயாகின்றது.

பயணம். பதைபதைப்பு. நடை. மீண்டும் பய....ண....ம்
ஆ! என்ன ஏமாற்றம். கானலைகள் கண்டுமுன் நீராட்டுகின்றன.
ஆச்சரியமான ஏமாற்றம் உற்பவித்த மனச்சோர்வில் ரௌத்திரம் பொங்குகின்றது. - ருத்திர பூமியில் உன் நெற்றிக் கண்ணென -

உன் இருப்பிடத்தை நன்கறிந்தவர்கள் என நான் எண்ணியவர்கள் காட்டிய இருப்பிடங்கள் -

வெளவால் எச்சம் நிறைந்த இருட்குகைகள்.

பாழடைந்த மாளிகைகள். இருட்டின் அரசுகள்.... பாம்புப் புற்றுகள்....

**கலாவிநோதனே**

நீ இருக்குமிடங்கள் இப்படியா இருக்கும்?
அறியாமையான இருட்டா நிலவும்?
அங்கு, தூய்மை அல்லவா அரசோச்சும்.

படிகத்தின் ஒளியென
தெளிந்த நீரோடையென
காலை மலரின் விகசிப்பென
பனித் துளியெனப்
பளீரிடாதா?

எங்கெல்லாம் தூய்மையின் தரிப்பிடங்கள் தென்படக் கூடுமோ, அங்கெல்லாம் ஓடோடிச் சென்றேன். ஆனால்.

தூய்மைகள்.... அசுத்தமாகி, அலங்கோலமாயிருந்தன.

புனிதங்களில் அசுத்தக்கறை படிந்து களங்கப்பட்டுக் காண்பேன். என் கடமை இரண்டாயிற்று.

தூய்மையைத் தேடுவேனா? உன்னைத் தேடுவோனா?

தூய்மையும், நீயும்.

தூய்மை எங்கே? தூய்மை எது?.... எப்படி?.... எங்கே?.... - என் நெஞ்சம் வினாக்கொளுக்கிகளால், மந்தைக்குத் தழை பறிக்கும் இடையனின் வளைதடியாய்யல்லாது, மதநீர் சொரியும் மத்தகத்தையடக்கும் அங்குசமாய் வலியெடுத்தன.

தூய்மை - உடலா, உள்ளமா, உலகா.... உலகின் சடப்பொருளா.... உயிர்ப்பொருளா... அணுவா.... அண்டமா... எதிலிருக்கிறது?

- என் நெஞ்சப் பிசைதலில், எதுவோ சொட்டுகிறது. எங்கிருந்தோ.... எதுவோ.... ஏதோ.... என் மனதில் கூவுகிறது

'உள்ளமே கோயில்.... நெஞ்சமே கற்பக்கிருகம்.... ஆத்மாவே தீபச்சுடர்'.

என் மனதில் காலை ஒளி பரவுகிறது.

**தேவனே!**

என் நெஞ்சத்தை உனக்கு எப்படி ஆலயமாக்குவேன்?

என் நெஞ்சம் தூய்மையானதா என்பதனையே அறியேனே. ஆனாலும்,

ஹம்சதூளிகா மஞ்சமென எனக்காக என் இதயத்தை அமைக்க ஆசையால் அவாவுகிறேன்.

நெஞ்சத்தைத் தூய்மைப்படுத்த எடுத்த துடைப்பமே குப்பைகளாக உதிர்கின்றன.

குப்பையாக - குப்பைவாரே மாறிவிடுகின்றதே.

இறையே! இது என்ன சோதனை? துடைப்பத்தை வீசி எறிந்து விட்டு,

மனவைராக்கிய வாரினால் அள்ளுகிறேன்.

என்ன கொடுமை!

குப்பை மேட்டின் கோழிக் கால்களில் சிதறும் குப்பை கூளங்களாக.... என் மனக்கஞ்சல்கள் புறப்படுகின்றன.

இவ்வளவு கஞ்சல்களை வைத்துக்கொண்டா, தூய்மையை நாடி ஓடினேன்? நோய் பரப்பும் கிருமிகளைக் கையில் வைத்துக்கொண்டா, நோயாளியைச் சுகம் விசாரிக்கச் சென்றேன்? இவ்வளவு அழுக்குகள் எப்படி என்னில் சேர்ந்தன?

வியப்புத் தாளவேயில்லை, விம்முகிறேன்.
அதிருப்தியும் ஏமாற்றமும் நிறைகின்றன.
மனம் வைராக்கியம் கொள்கிறது.

மனவாரினால் - குப்பையை அள்ள அள்ள.... சகதியில் கால் வைத்தவன் கதையாகி....

குப்பை குறைவதற்குப் பதிலாக.... மன ஆழமே விகாரமாக மாறுகின்றது.... புண்ணிருந்த குழியாகி ஆழம் ஆழமாக....

**இறையே!**

இந்த ஆழத்தைக் காணக்காண எனக்குப் பயம் மேலிடுகிறது. என்னைக் காப்பாற்று....

என் கதறலிலும், என் மன ஆழமே அதிகரிக்கின்றது.

**இறையே!**

உனக்குச் சிம்மாசனம் அமைக்க முயன்ற நான்.... பொறியாசனமாக அமைகின்றேன்?

**தேவா!**

நெஞ்சப்பொறியும் கோவிலாமே?
என் வினாவினால் உனக்கும் சிரிப்பு வருகிறதா?
உன்னைச் சிரிக்கவைக்க திருப்தியுடன் நான்
திரும்புகையில் -

'இப்போதும் வென்றவன் நீயே' என வாய் முணுமுணுக்கிறது.

# வேட்டைக்காரன்

**மூர்த்தத்தின் முதல்வனே!**

பூமாவின் புனிதனே!.... புவி நாயகனே!.... உன்னால் நலம்பெற்ற நான் -

அருட்கொடை வழங்கும் வள்ளலான உன்னை -

வற்றாத - வாரியிறைக்கும் வள்ளண்மை ஒன்றினால் மட்டும் உன்னை அறிந்து,

ஏனைய, உலகத்தோர் போன்று, உன்னுருவை, உன் எழிலை,

கம்பீரமான, வீரக்கழல் அணிந்த பாதங்களை, என் ஆத்மாவின் பூந்தூறல்களால் புதைக்கவேண்டும்,
என்ற பேரவாக் கொண்ட பிரபஞ்ச ஆசைத் திரட்சியின் முடிவில்....

நான் தீடீரென உற்சாகம் கொண்டு என் மலர்களை உன் மலரன்ன பாதங்களில் -

பூஞ்செடியின் முட்கள் உதிர்ந்ததென,
பாம்பின் கோடைகால சட்டையின் உதிர்வென,
முள்முருக்கின் கண்ணான முட்கள் பதிந்ததென,
மழைக்காலக் காளான் பூ கவிந்ததென,
வேதனையின் துடிப்பினாலோ
வெறுப்பின் சீற்றத்தினாலோ
உன் வீரக்கழற் திருவடிகள்
சப்தமிசையாமல் மெல்ல மெல்ல
நகர்ந்ததை நான் அறிந்து
துணுக்குற்றபோதுதான்
என் ஆத்மாவில் இருந்து உதிர்ந்தவை
பூந்துகள்களல்ல;
முட்புதர்களென
திக்கித்து நிற்கையில் என்மனம் முட்களான விந்தையின்
காரணத்தை அறிய ஆவலும்,
அதனை மீண்டும் மலராக்க வேண்டுமெனும்
மனவிருப்பும் என்னுள் எழுகின்றன.

**இறையே,**

மனங்களைப் படைத்தவன் நீயே,
விதைகளை எறிந்தவனும் நீயே,
நீ எறிந்த வித்தில்,
எறியாத வித்து முளைக்கவில்லையே,
என நீயே வெறுத்தோடுவது எதனால்?

பருவத்தைப் படைத்து,
பாசத்தை விதைத்து
காலச் சக்கரத்தை
சுழற்றி விட்டவனும் நீயே!
சுழற்சி வேகத்தில் நீ விதைத்த வித்துக்கள்
விட்டேறியாகி விட்டனவா?

உன் தோட்டத்து வித்துக்கள் எங்கே சென்று விழுந்தன? நானறியேனே! அறிந்திருந்தால்,

உன்னை, உன் அருளைப் பெறுவதற்காக அந்த வித்துக்களைத் தேடி நாடி ஓடி உழைப்பேனே...!

**இறையே,**

அந்த வித்துக்கள் என்னாயின?
அல்லது, என் மன வேக்காட்டில்,
பாசத்தீயில்,
வெந்து பொரிந்து விட்டனவா?
அவ்வாறாயினும்,
மலரில்லா விட்டாலும், மணமேயில்லாவிட்டாலும்
பொரிகளும் - வடிவில் பூக்கள் தாமே?
அந்தப் பொரிகளைத் தேடித் தேடித்தான்,
கதிரவனே காலங் காலமாக அலைகின்றானா?
அவன் முயற்சியே வெல்லாதபோது -
என் தேடுதல்கள் என்னவாகும் என்பதனையே நானறியேனா?
ஆனாலும்,

**மேலானவனே?**

உன் நாமத்தை என் நா உச்சரித்துக் கொண்டிருக்க
என் மனம் என்னும் முட்புதரில் -
நீ குழிமுயலாகவாவது,
சற்றுநேரம் தங்கிப் போகமாட்டாயா என்ற
ஏக்கத்தில் என் புதர்நிறை மனத்தினை,
இருண்ட காடென வளர்க்கின்றேன்
ஆகவே -
நீ -
வேட்டைக்காரனாகவோ,
விறகு வெட்டியாகவோ,
நிச்சயம் வருவாய் என்ற நினைப்பில்,
என் ஆத்மா உன் வருகைக்காக - தனது
மனமெனும் மலர்களாம் முட்களை உதிர்த்துக் கொண்டிருக்கும் ஓசைகளின் ஒலி உன் பூஞ்செவிகளில் விழவில்லையா?

★

# சந்நிதி குண்டம்

**மகாப் பிரபு!**

உன் ஆலயமணியின் தேன் நாதச் சிதறல்கள் என் செவியிலே பதிகையில் - உன் அழைப்பின் அச்சாரமாகக் கருதி-

நீயே என்னை அழைப்பதாகக் கற்பித்துக் கொண்டு, உன் நெடிதுயர்ந்த-வீறார்ந்த கோபுர வாசலில்,

உன் தாளெனும் கஞ்சமலரின், நிழற் படியில் தலைவைத்து, என் பாசச்சுமை யிறக்கி,

இலேசான மனத் தளிராய்,
கருகும் திரியின் சுடரசைவாய்,
உன் அணைப்பில் ஒன்றலாம் என்ற பேரவாவில் -
பட்டிப் பறவைகள் இருப்பிடம் நாடிப் பறப்பதைப் போல -
மூலம் மறந்த பெருநதிகள், மூலத்தின் மூலமான கடலை நோக்கி ஓடுவது போல -
மாலைநேர மந்தையினம் கழுத்துமணி அசைந்தாட தொழுவத்தை நாடுவதுபோல -
நான் ஓடோடியும் வருகிறேன்.
என்னுடன்,
என் பசிகள்... தாகங்கள்.. வேட்கைகள்
எல்லாம் உடன் பிறப்பாய்த் தொடருகின்றன.
அதனால்,
என் கால்கள் தயங்குகின்றன. ஓட்டப் போட்டியின் ஆரம்பத்தில் வேகமாக ஆரம்பித்த வீரனின் கால்கள், வெற்றிக் கம்பத்தை நெருங்க... நெருங்க... தயங்கித்.... தியங்கி முடங்குவதுபோல...
வெற்றியுமிழந்து, முடிவையும் நெருங்க முடியாது... வீழ்வதுபோல்...
நானும்,
அழுக்குடையுடனும், பரிசளிப்புகளற்ற கைகளுடனும் வந்த வறியவர்கள், விழா மண்டபத்தின் வெளியே நிறுத்தப்பட்டிருப்பதுபோல -
நானும் நிறுத்தப்பட்டு,
புறக்கணிக்கப்பட்டு,
அநாதரவாக நிற்கின்றேன்.
(தேவனே!
என்னை மன்னித்துவிடு,
உன் முன்றலில் யார், எப்படி
நிராதரவாகி நிற்க முடியும்?)

**ஞான தீபனே,**

உன் அங்கங்கள்... பாதாதி கேசம் வரை... தீப முழுக்காடுகின்றன.

தீபங்கள் - உனக்குத் திருமுழுக்காட்டுகின்றனவா?

திருவமுது ஆகின்றனவா?

தீப நிவேதனத்தில் மின்னும், உன் இதழமுத வெள்ளத்தில் நான் நனைந்து, தீக்குளிப்பில் நீராடி -

**இறையே,**

உன் முன் படைப்பனவெல்லாம்... பாலோ.. பருப்போ.. பாகோ... நெளிதேனோ.. வெண்பொங்கலோ... செங்கட்டிகளோ... கல்லோ... மலரோ... எல்லாமே.. உனக்கு... உன் முன்னால்...

பரிசுத்த பிரசாதமாகின்றன.
பக்தன் படைத்த அமுதை - நீ
உண்டு முடித்து - எச்சிற் கலையாக்கியபின்,
எஞ்சியதை -
படைத்தவனே
பயபக்தியுடன் தீண்டும்,
தீர்த்தமாகின்றன, பிரசாதமாகின்றன.

இதுவே உன் பெருமை.... கொடை.... வாழ வழிகாட்டி நிற்கும் ஞானலீலை.

ஆனால்,

எம் எச்சில்களோ,
அழுக்காகின்றன. நோய் பரப்பும்
கிருமிகளாகின்றன.

அதனைக்கூட,
எம்மை வெளிப்புறத்தே காத்து நிற்கும்,
நாய்களுக்கும்,
வறியவர்களுக்கும் பிரசாதமாக்கினால்
தெய்வமாகலாம்
- என்ற தவறான சிந்தனையில்
தம்மை மறந்த செய்கைகளால் -
மனிதர்கள், மிருகங்களாகி
உன்னையே களங்கப்படுத்தி விடுகிறார்கள்
உன் போதங்கள் - தத்துவங்கள் - நெறிகள்
கைப்பிடிக்கையில்,
தவறு நேர்ந்துவிட்டால்...
(அது மனிதன் தவறுதானே?
அதனையும் உன்மேல் ஏற்றிவிட்டு)
உன்னைப் பற்றிய சிந்தனைகள்
தர்க்க மண்டபம் ஏறுகின்றன.
தர்க்கத்தில் தோல்வியடைபவை
நீயும் - உனது புகழுமல்ல.
உன்னைப் பற்றித் தர்க்கித்த,
பக்குமடையா பக்தனான

அறிஞனே -
தர்க்கத்தில் வெற்றியடைபவை
உன் இயல்பான புகழ்களே யன்றி,
தர்க்கித்தவனின் சிறப்பல்ல

என்பதனை,

நான் உணர்வேன்,

ஏனெனில்,
தர்க்கித்தவனுக்கும் அச்சிறப்பை
அளித்தவனும்

நீ தானே-

**இறையே,**

இத்தகைய சிந்தனைகளால் தான் -
நான் புனிதம் குறைந்தவனாயினும்
உன் சந்நிதியில் புகுந்து
உன் முன் படைக்கப்பட்ட
கல்லாலான... மரமாலான...
மண்ணாலான

பிரசாதங்களில் ஒன்றாகக் கொள்வாய் என்ற பேதமை நிரம்பிய ஆவலில் உன் வாசலின் வெளிப்புறத்தே காத்து நிற்கின்றேன்.

உன் அழைப்புக்காலம் என்றுவரும்... வரும் என்று கோடானுகோடி காலம் கழிக்கவும் நான் சித்தமாகவுள்ளேன்....

ஆனாலும்,

**இறையே..** காலச்சிற்பன் தனது உளிகளினால் என்னை உதிர்த்து மூளியாக்கி விட்டாலும், என் செவியை, மனதை இரண்டையும் செதுக்காமல் பாதுகாத்துவிடு... ஏனென்றால் உன் நினைவு பசுமையாக விளங்கட்டும். உன் அழைப்பு உன் அழைப்பு என் காதில் தெளிவாக விழட்டும்... என்பதனால் தான்....

நீ-

என்னை பிரசாதமாக்கி விடுவாயானால்,
வெளியே,
என்னைப்போல்
வெறுமையாய்க் காத்து
நிற்கும், எண்ணற்ற வாழ்வு தேடுவோரின் பிரசாதமாகப் பயன்படுவேனே!

**இறையே,**

என்னை ஏற்பாயா?
நிவேதனம் செய்யாயா?

உன் சந்நிதி குண்டத்தில் - யாக நெருப்பில் - இடப்படும் தர்ப்பைப் புல்லாகவாவது என்னை உன்னிடம் அழைத்து நீறாக்கிப் புனிதமாக்கமாட்டாயா?

# சிரிப்புப் பிரசாதம்

**பூஜ்யத்தின் கொலு வேந்தே,**

உன்னை எங்கெங்கெல்லாம் தேடித் தேடி மன இளைப்பும், உடற்சோர்வும் பெற்றதன்றிப் பயன்பெற்றிலேன்.

என் ஆத்மச் சிறகுகள் உதிர்ந்து, உதிரமே கொட்டி, நானலைந்த பாதையில், உன் வரவுக்காக செந்நிற, நிலப்பாடை விரிக்கின்றன. என் இறகுகளே உனக்குப் பூந்தூறலாகின்றன. அந்த இன்பங்கலந்த வேதனையில், மனம் இறுமாப்புக் கொள்கின்றது. ஆனால்,

இவையாவும் என் கனவுப் பூக்களே நிகழ்கால வசந்தத்தின் தேவதாரு உதிர்த்த பொன்னிலைகளாக மாற வேண்டும் என்ற அவாவுடன் என் மனங்களும் நினைவுகளும் உன்னையே துதிக்கின்றன.

நீ எங்கே?... எப்போது வருவாய்?.... நிலையாக நீ அமர்ந்த இடம் எது?...
நிலையற்ற, வலுவற்ற எங்களுக்காக, நிலையாக நீ திருக்கோயிலில் போய் அமர்ந்துவிட்டாயா?...

என் நினைப்பின் வேகத்தில் என் கால்கள் உன் ஆலயத்தை சரணாகதி அடைகின்றன.

உனக்காக, உன்னைத்தேடி, உன் ஆலய முன்றலிலே காலம் காலமாக காத்து நிற்கிறேன்.

காலங்கள் - நெய்தல், குவளை, ஆம்பல், சங்கம், கமலம் வெள்ளம் - எனக் கழிந்தேறுகின்றன.

என் காத்திருத்தலில் களைப்பே எழவில்லை. என் காத்தல் உனக்காக என்றாக - இளைப்பு என்னை அண்டுமா?.... இளைப்பு உடலுக்காக, உள்ளத்திற்காக?

உன் ஆலயவாசலில் காத்திருக்கிறேன். ஆனால்-
கருவறை மூடப்பட்டிருக்கிறது.
சாவியைத் தொலைத்தவனாக நான்.
மூடப்படாத வேளையிலும் நீ இருட்டில் தான்
இருக்கிறாயா?
உன்னால் எப்படி அப்படி இருக்க முடிகின்றது?

'என் புதல்வர்கள்
நீங்கள் எல்லாம்
அறியாமை இருளில்
பதவி இருளில்
பண இருளில்
போதை இருளில்
மாது இருளில்
இருக்கையில் எனக்கு மட்டும்
ஏன் ஒளி ?....? - என்று

ஒளிந்து கொண்டாயா?....
ஆனாலும்,

நான் காத்தே இருப்பேன். நான் ஒழியாத வேளையிலும் காத்தே இருப்பேன்.

உன் கருவறையின் மணிக்கதவங்கள் 'கணீ'ரெனச் சப்தித்துத் திறந்து கொள்கின்றன.

உன் கருணையே, கருணை.
உன்னைச் சந்திக்கும் ஆவலில் நான் வேகமாக உள்ளே நுழைகின்றேன்.

என்ன ஏமாற்றம் ; என்ன ஆச்சரியம்.
என் முன்னே
உன்னை மறைத்து
நீண்ட கூட்டம்
கும்பல்கள் ; மலர்க் குப்பைகள்.
வியர்வை அழுக்குகள்
ஒளியில் ஒளிருகின்றன.

அழுக்கை மறைத்த வண்ண வண்ண ஆடைகள்; ஆபரணங்கள்; நறுமணம் வீசும் வாசனைத் திரவியங்கள்,
இரண்டினது கலவைகள்.
எனக்கு, உன் சன்னதியில் குமட்டிக் கொண்டு வருகின்றது.

**இறையே,**
என்னைப் பொறுத்தருளு, தாயானவனே! என்னைத் தாற்பரி.
ஆரவாரங்கள் எங்கும் எழுகின்றன. என்னைப் பயம் சூழ்கின்றது. திகைப்பு மயக்குகின்றது.

உன்னை இப்போது முற்றாகத் தெரியவில்லை.
நீ ஒழிந்து கொண்டாயா?..

புழுதியில் அளைந்துவிட்டு வரும் தனயர்களான எம்மைக் கண்டு தாயான நீ அருவருப்புக் கொள்வது உன் தன்மையல்லவே... அந்தத் துணிவில் உன்னை... உன் அருள் முகத்தை... கருணை விழிகளைத் தேடுகிறேன்.

நீ எங்கே சென்றாய்?...

என் பார்வைதான் உன் திருமேனி விழும் கோணத்தில் படியவில்லையா?.....

தவறு எங்கே?....
என்னிலா என் பக்திக் குறைவிலா?... எதில்
என் கேள்வியே ஆணவமாகிவிட்டபோது, என் கேள்வியில்
வலுவுமில்லை; சத்தியமுமில்லை; தாபமுமில்லை.
அதனால்-
உன் பதிலுமில்லை

என் மனக் கண்ணாடி
எதில் பட்டு உடைந்து,
பல கண்ணாடியாகி, பல கோணங்களிலும்
பல காட்சி காட்டி,
ஒன்றையும் முற்றாகச்
சரியாகப்
பார்க்க முடியாமல்,
அதனால் ஏற்பட்ட ஆவலில்
எல்லாவற்றையும் பார்க்க முற்பட்டு,
ஏமாற்றம் மிஞ்சி, மனம் சலித்து நின்றபோது
உன் அழைப்புக் கேட்கின்றது.
தீபத்தில் நீ குளிக்க
என் கரம் குவிந்தபோது,
என் முன்னே எத்தனையோ
நீண்டுயர்ந்த கரங்கள்
என்னை மறைக்கின்றன.
வானோக்கி உயர்ந்து அண்டத்தையே ஆளும்
ஆக்ரோஷமுள்ள தொழிலாளர்களின் முஷ்டிக்கரங்களென
பக்தர்களின் கைகள் உயர்ந்து உன்னை என்னிலிருந்து பிரிக்கின்றன.
அவர்களின் ஆவேச பக்திக் கரங்கள் முன்னால்
என் கரங்கள் தோளினின்றும் கழன்றதெனச்
சோர்வுறுகின்றன. தோல்வியின்... ஆற்றாமையின் ஆளுகையில்
என் நெஞ்சம் நிலைகெட்டு, தறிகெட்டுப் பாதை மாறுகின்றது.
உன் வெற்றித் தேரோடிய பாதையில் உடலையே
தேராக்கி உருண்டோடிய உன்னடியார் மேனியே
உன் நீறார்ந்த மேனியான இரசவாதவித்தை புரியாமல்
ஏளனப் பார்வையால் அவர்களைத் தூர நிறுத்துகையில்
நான் உன்னிலிருந்து எட்டிப் போவதையோ
உடலாலோ உள்ளத்தாலோ உழைக்காத தூயமேனி
பல நோய்களின் மூலமான மாய மேனியனான என்னைவிட

அழுக்குடன் கூடிய
இப்பக்தர்கள்
என் முன்னே நின்றிருந்து
என் பக்தியை மறைத்தால்,
என் பக்தி பொய் என்றும்
அழுக்குடைய அவர் பக்தி
மெய் யென்றும்,
அழுக்கே- பொய் என்றும்
நான் மயங்கி நிற்கையிலே,
மணியாய்,
உன் சிரிப்பு காதில் விழுகிறது.
எக்காளம் நிறைந்த, உன் ஏளனச் சிரிப்பையே,
உன்,
பிரசாதமாகக் கொண்டு நான் திரும்பும் வேளையில்,
அன்பே பெருகுகிறது.

**இறையே**

இப்போதும் வென்றவன் நீயே,

# இருளின் ஒளி

**ஒளிச்சுடரில் - ஒளிபவனே!**

ஆனந்த ஜோதி... ஜோதியே உனக்கு நிவேதனமாகின்றது. எங்களிடமுள்ள பொருட்களிலே உனக்கு நிவேதனமாகக் கூடிய பொருளாக இருப்பது -

ஜோதிச் சுடரே,

திரி கருகும் போது, நீ தீபச் சுடராய் வியாபித்துச் சிரிக்கின்றாய். என மனமும் உன் சந்நிதியில் ஒளியாக வேண்டுமானால், தீபக் கரங்களாய் குவிய வேண்டுமானால்,

என் மன ஆவல்கள் ; ஆசைகள் ; துடிப்புக்கள் ; ஆணவங்கள் கருகியே தீரவேண்டும்.

அதனை நான் நன்குணர்வேன். உணர்வேன் என்ற ஆணவமான எண்ணங்களே என்னில் சுடர் ஏற்றத் தயங்குகின்றன.

**இறையே,**

நான் எங்ஙனம் என் மனத் தீபத்தை ஏற்றுவேன்?
நான் ஒரு தீபம் ஏற்றத் தயங்குகிறேன். தகுதியில்லாமல் தவிக்கின்றேன். ஆனால் -

நீ தான் எத்தனை ஜோதியாகின்றாய்?... எத்தனை ஜோதியை உன் அகண்ட திருவாயில் அமுதாக்கி விடுகிறாய்?...

ஜோதியையே அண்டமாக்கிவிட்ட நீ....

என்னை... என்னைப்போன்ற சின்னஞ்சிறிய மரக்கரியை தீபத்தணலாகவாவது, ஆக்கிவிடமாட்டாயா?....

தீக்கங்குகள் ஒருபோதும் தீபங்களாகமாட்டா? அதை நான் நன்குணர் வேன். ஆனால் என் ஆசையின் நிமித்தம் தகுதி மீறி உன் சந்நிதி நாடினேன்.

**ஜோதி பரிபாலனே!**

இது தவறா?... நீ தான் எத்தனை ஜோதியை கண்டவன். ஒளியென்ற ஒன்றான நீ, எத்தகைய வடிவங்களிலிருந்தெல்லாம் உருவாகின்றாய?....

ஒற்றைச்சுடர் ஜோதி,
பஞ்சமுக ஜோதி,
நாக ஜோதி,

மயில் ஜோதி,
கர்ப்பூர ஜோதி,
தூண்டாமணி ஜோதி,
அலங்கார வளை ஜோதி;
அகல் ஜோதி,
அகண்ட ஜோதி,

ஜோதி, ஜோதி.... சொல்லிலடங்கா ஜோதி.... ஆசைஜோதி... ஆனந்தமய ஜோதி....

ஜோதிகளே உனக்குப் பரமானங்களா?... சிற்றுண்டி வகைகளா?..... ஜோதிகளை நிவேதனம் செய்கின்றாயா?......

நிவேதனமே நீயாகின்றாயா?....
உணவும் நீ.... உண்பவனும் நீயா?.....
உன் உணவில் தான் எத்தனை வகைகள்...
வண்ணங்கள்...

மஞ்சள் கலந்த ஜோதி.
மானிற வெளிர் ஜோதி.
நீலச் சுடர் ஜோதி.
செந்நிறப் பவளச் ஜோதி.
நீர் நிற வெண்மை ஜோதி.
வெண்மையின் கலவு ஜோதி.

இதனாற்றான், உன்னை -
இத்தனை ஜோதிகளில் -
இத்தனை ஜோதிகளால்
தேடுகிறார்களா?....
தேடப்படும் பொருளால், தேடும்
பொருளா நீ?....

விந்தையானவன் நீ... விவேகமானவன் நீ... விளையாட்டுக்காரன் நீ...

உன்னை யார் தான் புரிந்து கொண்டார்கள்?... உன்னைப் புரியாமலே புரிந்ததாகப் பாவனை செய்ய,

'ஒளி என்ற உருவமாகி உணர்வூட்டும் நான் இருளின் பேதையரென மயங்கித் தவிக்கும், உன் பூவிழுந்த ஊனக் கண்ணின் விழிமறைப்புத் திரையை அகற்றும், சத்திர சிகிச்சைக் கதிர்களாக, என் ஒளியைப் பாய்ச்சுவது தான் என் தரிசனம். அத்தரிசனத்திற்கு நீ வழங்கும் அஞ்சலியான அர்ப்பணம் தான் உன் ஒளியலங்காரம்...' என்ற உன் எள்ளிநகையாடும் சிரிப்புக் காதில் விழுந்தும் ஜோதியின் துணையுடன் தேடிக் கொண்டிருக்கிறோம்.

இத்தனை விளக்குகளால் தேடுகின்றோமே.

நீ என்ன இருட்டிலா இருக்கிறாய்?... உன் இருப்பிடத்தில் இருட்டேது?.... நீயே ஒளியாகும்போது, உன் நிழலே இருட்டாக விழ மாட்டாதே... இருட்டு என்று எதனில் மயங்குகிறோம்...

இருட்டு....?
உனக்கா, எமக்கா?

இருட்டிலிருந்து கொண்டே, ஒளிக்கு ஒளிகாட்ட முற்படும் பேதைகள் நாம். ஆனால்-

எந்த இருட்டிலிருந்தும் என்னால் உறுதியாகக் கூற முடியும் -

'உன் பக்தர்கள்!' என்று
ஆகவே,

உன்னைத் தேடும் முயற்சிகளே தீபாலங்காரமாகின்றன. தீப வளைவுமுன்றில்களாகின்றன.

இத் தீபங்களைக் கையாளும் போது, நாம் நம்மை அறியாமலே, உன்னை ஸ்பரிசித்து விடுகிறோமல்லவா?

ஆயினும்-

வெற்றியின் இடையின் போதும், ஒரு ஐயம்.

'இதில் நீ - எந்த ஜோதி?' இந்த ஐயம் எழும் வேளையில் மீண்டும், உன் வெற்றிச் சங்கம் எக்காள முழக்கமிடுகிறது.

# புல்லின் பூக்கள்

**பனிமலைப் புனிதனே!**

புனிதத்தில் உறைபவனே!.... புனிதத்தின் பொருளே!...

உன்னை... உன் திருவடிகளைச் சேவிக்க என்னிடம் புனிதமானது எதுவுமேயில்லை.... என் உள்ளம் பாவக்கறை படிந்தது... என் கரங்கள் இரத்தக்கறை படிந்தவை.. என் விழிகள் நாள்தோறும் காமச் சேற்றில் புரள்பவை.

அழுக்கின் அழுக்கான நான்.. புனிதத்தின் புனிதமான உன்னைச் சேவிக்க, அடி பணிய, அடி முடி தோய உடலாலும், உள்ளத்தாலும், திருமுழுக்காட்டத் துடிப்பது வேடிக்கையான விந்தையே...

விந்தைகள் புரிபவனும் நீயே.. விந்தைகளும் நீயே...

நாம் கருவிகளே.... கருவிகளே... காரணனைத் தேடும் விந்தையைத் செய்பவனும் நீயே....

உன்னை என் தத்துவப மனத்தடாகத்தில் இழுத்து வெற்றிகாணத் துடிக்கும் வேளைகளில், நீ தாடாகத்தினின்றும், வெளியேறி, கரைநின்று சிரிப்பொலி சிந்துகிறாய். அந்தச் சிரிப்பொலியை, தடாகத்தில் நான் பெற்ற மணிக்குலங்கள் சப்திப்பதாக எண்ணி எண்ணி நான் இறுமாந்து அயர்ந்திருக்கும் வேளையிலே...

அர்த்தத்தின் அர்த்தமான நீ, சேற்றின் தளைகளிலே என் கால்கள் சிககுண்டு கிடப்பதைக் காட்டுகின்றாய்.

அவ்வேளைகளில் எதைக் கண்கள் - ஞான ஒளித்தெறிப்பில் - அக, புற உண்மைகளின் சொரூபங்களைத் தரிசிக்கும், அக்கணங்களில்,

நீ அருபியாகி விடுகிறாய்,

உலகின் ரூபத்தைப் படைத்த உன்னையே, ரூபனாக, அருபனாக, பூஜ்யனாக காணவிழையும் என் தத்துவார்த்தச் சிந்தனைகள் சிக்குண்டு, என்னையே திணறச் செய்கின்றன. கேலி செய்கின்றன.

நீ மெல்ல நழுவிவிட, நானும் திகைப்புமே மிஞ்சுகிறோம்.

ஆனாலும்,

என் உறவுகள், உன் மேல் காதலாகின்றன. என் துறவில் பற்றைப் பற்றவிட்ட பரமன், உன் அளவிலா விளையாட்டுக்கள் உனை என் வழிபாட்டின் கதாநாயகனாக்குகின்றன. உலகின் கதாநாயகனான உன்னை, என் வழிபாடு என்னும் குறுகிய வட்டத்திற்குள் அகப்படுத்தி, அதன் நாயகனாகத் துடிக்கும் என் அறியாமையை மன்னித்து விடு.

உன்னை எங்கெல்லாம் தேடி, இளைத்து, ஏமாந்து, தோல்வி சுமந்த நெஞ்சத்தின், ஆறுதல் பெருமூச்சாக நான் செய்த ஏற்பாட்டை

மன்னித்துவிடு.... என்னை மணக்கவிடு.

என் மன வட்டத்திற்குள் சிக்கிய உன்னை வழிபட வேண்டுமென்ற ஆவலால், என்னிடம் எதுவுமே தூய்மையாக இல்லாததால்,

உன் திருவடிகளைச் சேவிக்க குற்றமற்ற நறுமலர்களை நாடித் தேடினேன். அப்போதும்,

என் நெஞ்சிலே எத்தனை எண்ணங்கள், வேதனைகள் பொரியாகச் சொரிகின்றன.

நான் தேடும் மலர்களும்,

மதுகரனின் காமக்கரங்கள் தீண்டாத புத்தம் புதியனவாக இருக்கவேண்டுமே?

பிறமலரின் மகரந்தம் கொண்ட தென்றற் காற்றும் தடவாத மலராய் இருக்கவேண்டுமே?

எண்ணங்கள் எரிபொருளாய், வேகமூட்ட, நான் உனக்குகந்த மலர்களை.... புவியின் சிலிர்ப்புக்களை.... வசந்தத்தின் கொடையை.... கோடையின் சிரிப்பை.... புத்துணர்ச்சியை .... நாடி....

குளங்களிலும்.... தடாகங்களிலும்.... தண்ணளிச் சோலைகளிலும்.... தேடுதல் நடாத்தினேன்.... உன்னைத் தேடும் நல்லடியார்கள் போல....

விடிந்தும், விடியாத .... பாதை இனம் காட்டாத புலரிப் பொழுதிலே நான் பட்ட சிரமங்கள் எத்தனை.... எத்தனை.... கழிந்த காலங்கள் தான் எவ்வளவு?

மொட்டாய்க் குவிந்திருந்து. செம்மையின் வண்மை அடியிலிருந்து நுனி பரவ, அவை இதழ்பிரிக்கும் வேளைகளுக்காக நான் எதிர்பார்த்துக் காத்திருந்தேன்.

எத்தகைய ஏமாற்றங்கள்.

சில காற்றிலே தன் இதழ்களை உதிர்த்தன. சில அலைகளால் அள்ளுண்டன. சில என்னைச் சேற்றிலே சிக்கவைத்தன. சில நான் பறிக்க முன்னரே ரீங்கார வண்டுகளால் களங்கப்படுத்தப்பட்டன.

ஆனாலும், என் முயற்சிகள் சோர்வடையவில்லை.

உனக்காக, நான் ஈடுபடும் தொண்டுகள் என்னை.... என் உள்ளத்தை நலிய விடுவதேயில்லை....

நானும் என் முயற்சிகளும், முயற்சி... முயற்சி...

உனக்காகவே நான் பறித்த மலர்களை உன் பீடத்தில் இடுவதற்காக நான் ஓடோடியும் வந்தேன்.

ஒரு கணம் மெய்மறந்தேன்.

'ஆஹா.... என் இறைவனின் ஆலயத்தில் புகும் ஆற்றல், தகுதி, தன்மை எனக்கு வந்துவிட்டது. நான் பாக்கியசாலி' என ஒருகணம் இறுமாந்தேன். என் பெருமிதம் என் கடமையை ஒருகணம் மறக்கச் செய்தது. அந்தக் கணத்தில்

அந்தோ -
அடுத்த காலடி எடுக்கையில் -
காலிடறி....

என் புஷ்பங்கள் சாக்கடை நீரில் சரிந்து, மிதந்து சிரிக்கின்றன.

நான் நிமிர்ந்து பார்க்கிறேன்.

கர்ப்பக் கிருகத்தின் பாறையிடுக்குகளிலே கண் விழித்த புற்களின் பூக்கள் உன் பாதார விந்தங்களைத் தழுவிச் சிரித்தபடி இருப்பதைக் காண்கிறேன்.

உன் போதங்களின் சொரூபம், கண்டத்தில் கறையென திக்கிக்க நிற்கின்றேன்.

# நாணலின் கீதை

**பகவானே!**

உனது கீதை குருஷேத்திர மண்ணில் காலூன்றி எழுந்தது.

நாளை மலர வேண்டிய புதுயுகப் பூக்களுக்காக, நிண நீரும், இரத்தமும் கலந்தமைந்த விளைநிலத்தின் வீரச்சேற்றில், மானிட அனுபவங்கள் வீறுகொண்டு நாதமென எழுந்தன.

நீ வானத்தாமரையில் வாழ்த்திசைக்கும் வண்டுகளின் ரீங்காரத்தையோ, வானவில் கோடியில் மெல்ல வந்திறங்கும் மழைத்துளியின் ஓசையையோ.... வெட்டிப்பிளக்கும் மின்னற் கொடிகளின் இலக்கண நரம்புகளையோ உன் கீதசுரமாய், பொருளாய் மீட்டிங்கு வரவில்லை.

பார்த்தனின் முன்னால் அநாயாசமாக உன்னால் ஆத்மராகத்தை அப்பழுக்கின்றி அனுபவ வரிகளில் இசைக்கும் போது, உன் அனுபவ வீச்சின் அடிமுடி வியப்பின் எல்லைகளையே தாண்டுகின்றன.

நீ அவதார புருஷனாகக் கீழிறங்கி, மானிட அனுபவ வீச்சுக்களாலும், தரிசனங்களாலும் புடம் போடப்பட்டு, தீர்க்க தரிசனமாக உன் மனச் க்ஷேத்திரத்தில் ஏலவே ஒரு குரு க்ஷேத்திரத்தை நடாத்தி, அதன் அனுபவ முத்திரைகளையே பின்னால் கீதையாக்கினாய்!

ஆனால் எது கீதை....?
நீ வித்தூன்றிய உரமிட்ட மண்ணிலே,
காட்டாற்றின் ஓரம்.... கதிரென வளர்ந்து....
கனியற்ற பூச்சிந்தி, காற்றணையும் வேளையிலேகானம் பெருக்கி
பின்பனி காலங்களில் வைர மணிமகுடம் சூடி, மறைகின்ற வெப்பத்தில்
ஆற்றினிலே மணவோட,
என் ராகம் சருகோசையாய் பரவும்
பூஞ்சிட்டின் உயிர்க்கூடு குஞ்சுடனே
ஊஞ்சலாய் என் உடலிலாட
உல்லாச கீதம் உயிரின் கீதம்
உன் புகழே பாடும்.

# நெஞ்சம் நிறைந்த....

**அவரது வாழ்வின் போதும்**

**நெருக்கடியான காலகட்டத்திலும்**

**அவர் மரணத்தின் போதும்**

**அவர் மீதான அன்புடனும்**

**அக்கறையுடனும் எல்லாவகையிலும்**

**பங்குகொண்ட அன்புள்ளங்கள்**

**அனைவருக்கும் எங்கள்**

**நெஞ்சம் நிறைந்த**

**நன்றிகள்.**

குடும்பத்தினர்.



# வம்சா

செல்லத்துரை + நாகமுத்து

↓

ஆறுமுகம் + தமர்தாம்பிகை

- கணேசபிள்ளை + இராஜகுமாரி
  - மலர்விழி + சுப்பிரமணியம்
    - கௌசிகன்
    - வைஷ்னவி
  - மைதிலி + முருகதாஸ்
    - ஆதவன்
    - சௌமியா
  - தர்சினி + சிவசுதன்
- இராஜகோபால் + புவனேஸ்வரி
  - இராகுலன்
- செபஸ்தியம்மா + அன்ரனி
  - ஜெரோம்
  - ஜெரினா
  - கரோலின்
  - எரிக்
  - நிக்சன்
  - கெலினா
  - எட்னா
  - றெஜி
- மகேஸ்வரி + ஜெயராஜசிங்கம்
  - சியாமிளா
- கீதபொன்கலன் + ஜெபமணி
  - மேரி சிரானி
  - மொறின் ராதிகா
  - டொறின் செரீனா
  - பிரசாதி சஜித்திரா
  - டெனால்சுரேஸ்குமா

# ...சாவழி

சந்தியாப்பிள்ளை + பொன்னம்மா

| | | | | |
|---|---|---|---|---|
| கீதபொன்கலன் | சச்சிதானந்த தேவி | சந்திரராஜேஸ்வரி | சண்முகானந்தராஜா | பிரேமராணி |
| + | + ------- + | | + | + |
| ஜெபமணி | செல்லத்துரை | ஜோன்சன் | தர்மபூசனி நளினிதேவி | ஈஸ்வரகாந்தன் |
| ↓ | ↓ | ↓ | ↓ | ↓ |
| மேரி சிரானி<br>மொறின் ராதிகா<br>டொறின் செரீனா<br>பிரசாதி சஜித்திரா<br>டெனால்சுரேஸ்குமார் | செல்வானந் + விஜிதா -பிரிஷா<br>காயத்திரி<br>விஜயகௌரி<br>அபிராமி | மேரி<br>கூபேட்<br>ஸ்ரிபான் | ரிஷிசிருங்கன்<br>சுதர்சினி<br>தர்சினி | மோகன்ராஜ் |



விவேகி
VIVEKI
40 சதம்
காலத்தின் குரல்கள்
நாணலின் கீதை
இலக்கியம்
யாழ். இலக்கிய வட்ட மலர்
1966
கங்கை
1982 - 1983
ஈழத்துப் பரிசுச் சிறுகதைகள்
செம்பியன் செல்வன்